بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 11

இதழ் 42

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரீ கமரீ 1448 - ரபீயுஸ் ஸானீ 27

ஹிஜ்ரீ ஷம்ஸி 1405 - அகா 15 ★ 15 அக்டோபர் 2026

அல்லாஹ்வின் கட்டளை

وَمَنۡ يُّعَظِّمۡ شَعَآئِرَ اللّٰهِ فَاِنَّهَا مِنۡ تَقۡوَى الۡقُلُوۡبِ
لَكُمۡ فِيۡهَا مَنَافِعُ اِلٰٓى اَجَلٍ مُّسَمًّى ثُمَّ
مَحِلُّهَاۤ اِلَى الۡبَيۡتِ الۡعَتِيۡقِ

உண்மையில் அல்லாஹ்வின் புனித அடையாளங்களை ஒருவர் மதித்தால் நிச்சயமாக அது அவர் உள்ளத்தின் இறை அச்சத்திலிருந்தே (வெளிப்படுவது) ஆகும்.

(குர்பானிகளாகிய அவற்றிலிருந்து குறிப்பிட்ட ஒரு காலம் வரை நீங்கள் பயன் பெறலாம். பின்னர் அவற்றை புராதன இறையாலயத்தில் சேர்ப்பித்து விட வேண்டும் (என்பதை நினைவில் கொள்ளுங்கள்). (22:33,34)

அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

நபிமொழி

அல்லாஹ் வானங்களையும் பூமியையும் படைத்த நாளில் இருந்தே (மக்கா) நகரத்தை புனிதம் ஆக்கியுள்ளான்

عَنْ عَابِسِ بْنِ رَبِيعَةَ، عَنْ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُ، "أَنَّهُ جَاءَ إِلَى الحَجَرِ الأَسْوَدِ
فَقَبَّلَهُ، فَقَالَ: إِنِّي أَعْلَمُ أَنَّكَ حَجَرٌ لاَ تَضُرُّ وَلاَ تَنْفَعُ، وَلَوْلاَ أَنِّي
رَأَيْتُ النَّبِيَّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ يُقَبِّلُكَ مَا قَبَّلْتُكَ".

ஹஸ்ரத் ஆபிஸ் பின் ரபீஆ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் ஹஜரே அஸ்வத் (கருப்புக் கல்) அருகில் வந்து, அதை முத்தமிட்டார்கள். மேலும், கூறினார்கள்: 'நீ ஒரு கல் மட்டுமே ஆவாய்; மேலும், உன்னால் எந்த நன்மையும் பயக்க முடியாது; எந்தத் தீமையும் செய்ய முடியாது என்பதை நான் நன்கறிவேன். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் உன்னை முத்தமிடுவதை நான் பார்க்கவில்லை என்றால், நிச்சயமாக நான் உன்னை முத்தமிட்டிருக்க மாட்டேன்.' (ஸஹீஹுல் புஹாரி, கிதாபுல் ஹஜ், ஹதீஸ்: 1597)

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். மக்கா வெற்றி நாளன்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'இனி ஹிஜ்ரத் (நாடு துறத்தல்) கடமை இல்லை; ஆனால், நல்ல எண்ணமும், ஜிஹாதும் இன்னமும் எஞ்சியுள்ளது. எனவே, நீங்கள் ஜிஹாதிற்காக அழைக்கப்பட்டால், உடனே ஆயத்தமாகி விடுங்கள்.'

மேலும் கூறினார்கள்: 'இந்த (மக்கா) நகரத்திற்கு அல்லாஹ் வானங்களையும் பூமியையும் படைத்த நாளிலிருந்தே கண்ணியம் அளித்துள்ளான். எனவே, இது அல்லாஹ்வின் கண்ணியத்தால் மறுமை நாள் வரை கண்ணியமிக்கதாகும். எனக்கு முன்பும் இதில் போர் செய்ய எவருக்கும் அனுமதி அளிக்கப்படவில்லை; எனக்கும் கூட ஒரு நாளின் ஒரு குறிப்பிட்ட நேரம் மட்டுமே அனுமதி அளிக்கப்பட்டது. (மக்கா வெற்றி நாளன்று அனுமதி கிடைத்திருந்தது) இனி இது என்றும் அல்லாஹ்வால் நிலைநாட்டப்பட்ட கண்ணியத்தின் காரணமாக மறுமை நாள் வரை புனிதமானதாகும். எனவே இதன் முட்களை வெட்டக்கூடாது; இதன் வேட்டைப் பிராணிகளை விரட்டக் கூடாது; இங்கு கீழே விழுந்து கிடக்கும் பொருளை அறிவிப்பு செய்யும் எண்ணம் கொண்டவரைத் தவிர வேறு யாரும் எடுக்கக்கூடாது; இதன் புற்களைப் பிடுங்கக் கூடாது.'

அப்போது, 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! 'இத்கிர்' (எனும் ஒரு வகை) புல்லுக்கு அனுமதி வழங்குங்கள்? ஏனெனில் அது இங்கு கொல்லர்களுக்கும், வீடுகளுக்கும் அவசியமாகும்!' என்று அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள் கேட்டார்கள். அதற்கு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். "இத்கிர்' வகைப் புல்லிற்கு அனுமதி உண்டு'. (ஸஹீஹுல்-புஹாரி, கிதாபுல் ஜஸாஉஸ் ஸைத், ஹதீஸ்: 1834)

* * * * * * * * * * * * *

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பொன்மொழிகள்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய துஆக்களின் வார்த்தைகள்

1886-இல் ஹஸ்ரத் ஸூஃபி அஹ்மது ஜான் ஸாஹிப் (ரலி) அவர்கள் பைத்துல்லாஹ்வை ஹஜ் செய்வற்காக புறப்பட்ட போது,

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அன்னாருக்கு எழுதிய ஒரு கடிதத்தில் இவ்வாறு கூறினார்கள்:

இந்த ஏழை மற்றும் இயலாதவனின் இந்த ஒரு தாழ்மையான கோரிக்கையை நினைவில் கொள்ளுங்கள்: உங்களுக்கு அல்லாஹ்வின் அருளால் பைத்துல்லாஹ்வை தரிசனம் செய்யும் வாய்ப்பு கிடைக்கும் போது, அங்குள்ள அருளுக்குரிய 'மகாமே மஹ்மூத்' என்ற அந்த இடத்தில் அல்லாஹ்வின் இந்த எளிய அடியானின் சார்பாக, இதே சொற்களில் ஏழ்மை மற்றும் பணிவுடன் (உருக்கமான) உள்ளத்தால் கரங்களை ஏந்தி துஆ செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்:

'கருணையாளர்களுக்கெல்லாம் பெருங் கருணையாளனே!! உன்னுடைய ஓர் எளிய, வறிய, பிழை நிறைந்த, தகுதியற்ற அடியானாகிய குலாம் அஹமது உனது பூமியாகிய இந்திய நாட்டில் உள்ளார். அவரது கோரிக்கை இதுவாகும்: அவர் கூறுகிறார்:

கருணையாளர்களுக்கெல்லாம் பெருங் கருணையாளனே! நீ என்

இதன் தொடர்ச்சி 10-ம் பக்கம்....

தஃப்ஸீரே கபீர்

குர்பானிகளை நாம் அல்லாஹ்வின் அடையாளங்களாக ஆக்கியுள்ளோம்

وَالۡبُدۡنَ جَعَلۡنٰهَا لَكُمۡ مِّنۡ شَعَآئِرِ اللّٰهِ

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்தின் விளக்கவுரையில் கூறுகின்றார்கள்:

நாம் குர்பானி ஒட்டகங்களை அல்லாஹ்வின் அடையாளங்களில் ஒன்றாக ஆக்கியுள்ளோம். அதாவது அவை மனிதனை அல்லாஹ்விடம் கொண்டு சேர்க்கின்றன; அவற்றின் மூலம் மார்க்க மற்றும் உலக நன்மைகள் கிடைக்கின்றன. எனவே, குர்பானி நாட்களில் அவற்றை வரிசையாக நிறுத்தி, அவற்றின் மீது அல்லாஹ்வின் பெயரை நினைவு கூறுங்கள்; அதனால் அவை அல்லாஹ்வின் அடியார்களுக்குப் பயன்படட்டும். ஆக, அவை அறுக்கப்பட்டு ஒரு பக்கம் விழுந்துவிடும்போது, அவற்றின் இறைச்சியை நீங்களும் உண்ணுங்கள்; மேலும் பொறுமை செய்பவர்களுக்கும், ஏழைகளுக்கும், துன்பத்திற்குள்ளான வறியவர்களுக்கும் உண்ணக் கொடுங்கள். அதனை

இதன் தொடர்ச்சி 10-ம் பக்கம்....

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

பிரிட்டன் ஆண்டு மாநாடு - 2026
ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்)
அவர்கள் பெண்களுக்கு மத்தியில் ஆற்றிய உரையின் சுருக்கம்

தஷஹ்ஹுத், தஆவுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ்வின் அருளால் நீங்கள் இந்த ஜல்ஸாவில் கலந்து கொண்டுள்ளீர்கள். அஹ்மதி பெண்கள் மார்க்கத்தில் ஆர்வம் கொண்டுள்ளனர்; மேலும், தங்களது மார்க்க அறிவை வளர்த்துக் கொள்ள விரும்புகின்றனர் என்பதற்கும், அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறவும், அவனது விருப்பத்தைப் பெறவும் முயற்சி செய்கின்றனர்; மேலும்,உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை அளிப்பதாக செய்த வாக்குறுதியை நிறைவேற்றுபவர்களாக இருக்கின்றனர் என்பதற்கும் இதுவே சான்றாகும்.

தூய்மை மற்றும் இறையச்சத்தை உருவாக்குவது மற்றும் (ஜமாஅத் உறுப்பினர்களாகிய) அவர்களின் நல்லொழுக்க நிலைகளை மிக உயர்ந்த நிலையை அடையச் செய்வது ஆகியவைதான் ஜல்ஸா நடத்துவதற்கான நோக்கமாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள் என்று நேற்றைய உரையில் நான் கூறியிருந்தேன். நாம் இந்த சில நாட்களில், இன்னும் கூறப்போனால் நிரந்தரமாகவும், தொடர்ந்தும் முயற்சி செய்ய வேண்டும். மேலும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நம்மிடம் என்ன எதிர்பார்க்கின்றார்கள்? என்ற விஷயத்தின் மீது நாம் கவனம் செலுத்த வேண்டும். அல்லாஹ் அன்னாரை மார்க்கத்தை புதுப்பிப்பதற்காக அனுப்பியுள்ளான். எனவே, நாம் அன்னாருடைய பைஅத்தில் இணைந்து, நமது ஆன்மிக நிலையை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்காக அன்னாருடைய அறிவுரைகளின்படி செயல்படுபவர்களாக மாறும்போதுதான் இந்த நோக்கம் நிறைவேற முடியும்.

அன்னார் (அலை) மேலும் கூறினார்கள்: எந்த சமுதாயத்தைப் பற்றி فَإِنَّهُمْ قَوْمٌ لَا يَشْقَىٰ جَلِيسُهُمْ (பொருள்: இவர்கள் எத்தகைய மக்கள் என்றால், அவர்களுடன் அமருபவர் துரதிர்ஷ்டசாலியாக மாட்டார்; அவர்களுடன் அமருபவர் கெட்டவராக மாட்டார். அவர்களின் ஒழுக்கம் உயர்ந்த ஒழுக்கமாக இருக்கும்.) என்று வந்துள்ளதோ அத்தகைய சமுதாயமாக நீங்கள் ஆகுங்கள். இது நாம் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டிய ஓர் அடிப்படை விஷயமாகும். இதற்காக நாம் முயற்சி செய்ய வேண்டும்.

எனவே, எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். நமது அடிப்படை நோக்கம் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதாகும். அது எப்போது சாத்தியமாகும் என்றால், நமது ஒவ்வொரு செயலும், நமது ஒவ்வொரு கூற்றும் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக அமைய வேண்டும். மேலும், நாம் அவனுடைய போதனைகளின்படி செயல்படுபவர்களாக இருக்க வேண்டும்.

அன்னார் (அலை) கூறினார்கள்: எனது உரையை முழு கவனத்துடன் கேளுங்கள்; ஏனெனில் அல்லாஹ்வின் தூதரின் உரையை கவனமாகக் கேட்க வேண்டும். மேலும், நீங்கள் அவற்றை கவனமாகக் கேட்கும்போதுதான், இந்த பைஅத்தில் இணைதல் மற்றும் இறைவனால் அனுப்பப்பட்டவருடன் உங்களை இணைத்துக் கொள்ளுதல் ஆகியவற்றின் நோக்கத்தை பெறுபவர்களாக நீங்கள் இருப்பீர்கள். எனவே நீங்கள் ஒவ்வொரு விஷயத்தையும் கவனத்துடனும், சிந்தனையுடனும் கேட்க வேண்டும் என்ற இந்த விஷயத்தை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். ஏனெனில் இது ஈமானிய விவகாரமாகும்.

அன்னார் (அலை) கூறினார்கள்: ஈமானில் அலட்சியமாக செயல்படும்போது, மக்களை விளித்து ஏதேனும் எடுத்துரைக்கப்படும்போது அதை அவர்கள் கவனமாகக் கேட்கவில்லையென்றால் பின்னர் நினைவில் கொள்ளுங்கள்! விஷயத்தை எடுத்துரைப்பவரின் கூற்று எவ்வளவுதான் உயர் தரமானதாகவோ அல்லது சக்திமிக்கதாகவோ இருந்தாலும் சரியே! அதனால் அவர்களுக்கு எந்தப் பயனும் ஏற்படாது.

சில நேரங்களில் மக்கள் தவறான நபரின் தூண்டுதலுக்கு இரையாகி விடுகின்றனனர். அவர்களின் பேச்சுக்களில் மயங்கி விடுகின்றனர். பின்னர் ஜமாஅத் மீது ஆட்சேபனையும் தொடங்கி விடுகிறது. சிலநேரம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீதும் ஆட்சேபனை தொடங்கி விடுகிறது. எனவே, நீங்கள் அனைவரும் உங்கள் அறிவை அதிகரித்துக் கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் போதனைகளை கவனமாகக் கேட்கும்போது மட்டுமே நமது ஆன்மீக மற்றும் செயல் நிலைகளைச் சீர் செய்ய முடியும். நாம் வெறும் பைஅத் செய்துவிட்டு அமர்ந்து விட்டால், நமது மார்க்க அறிவை வளர்த்துக் கொள்ளவில்லை என்றால், பின்னர் நம்மால் எவ்வித வெற்றியையும் பெற முடியாது.

அன்னார் (அலை) கூறினார்கள்: அல்லாஹ் உண்மைகளை திறப்பதற்காக இந்த இயக்கத்தை நிறுவியுள்ளான். அதாவது, உண்மைகளைத் தெளிவுபடுத்துவதற்காகவும், உண்மைகளை வெளிப்படுத்துவதற்காகவும் இந்த இயக்கத்தைத் நிறுவியுள்ளான். எனவே, செயல் ரீதியிலான உண்மையுடன் இஸ்லாத்தின் சிறப்பு உலகிற்கு வெளிப்பட வேண்டும். வெறும் வாயளவிலான பேச்சாக இருக்கக் கூடாது என்று நான் விரும்புகிறேன். இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்பவர்கள் ஏராளமான விஷயங்களைக் கூறுகின்றனர். பெண்களுக்கும் இதனுடன் தொடர்பு உள்ளது.

திருக்குர்ஆனை கவனமாகப் படித்தால், பின்னர் அனைத்துக் கேள்விகளுக்கும் பதில்கள் கிடைத்து விடும். இது மட்டுமின்றி, இன்றைய நாட்களில் நமது பல தஃப்ஸீர்களும் உள்ளன. அவற்றிலிருந்தும் அதிகமாக பயனடைய முடியும்.

அன்னார் (அலை) கூறினார்கள்: திருக்குர்ஆன் முந்தைய வேதங்கள் மீதும், நபிமார்களின் மீதும் நன்மை புரிந்துள்ளது என்பதை நினைவில் கொள்ளுங்கள். அவர்களின் நிலைமைகளை திருக்குர்ஆன் எடுத்துரைத்துள்ளது. மேலும், அல்லாஹ் திருக்குர்ஆனுக்கு எத்தகைய ஓர் அறிவார்ந்த வடிவத்தை வழங்கியுள்ளான் என்றால், அது எல்லா வகையான சான்றுகளாலும் நிறைந்துள்ளது.

திருக்குர்ஆனின் போதனை எந்த அளவிற்கு பரந்துபட்டதென்றால், அதற்கு எதிரில் எதுவும் நிற்க முடியாது. ஆனால் நிபந்தனை என்னவென்றால், திருக்குர்ஆனை வெறும் ஓதுவதோடு நின்று விடாமல், அதன் மொழிபெயர்ப்பையும் படிக்க வேண்டும். மேலும், அதன் விரிவுரையைப் படிப்பதன் பக்கமும் கவனம் செலுத்த வேண்டும்.

அன்னார் (அலை) கூறினார்கள்: திருக்குர்ஆன் ஓர் உயிருள்ள மற்றும் ஒளிமயமான வேதமாகும். எனவே, எந்தவோர் எதிரியின் எதிர்ப்பை பற்றியும் நமக்கு கவலையில்லை. நமது போதனை அனைத்தையும் விட உயர்ந்த போதனையாகும் என்பதை நாம் எந்த அச்சமும், தயக்கமும் இன்றி நிரூபிக்க வேண்டும்.

இன்று மேற்கத்திய நாடுகளின் சமூகத்தில் வசிக்கும் பருவ வயதை எட்டும் ஏராளமான பெண் பிள்ளைகள் திருக்குர்ஆன் மீது இன்ன இன்ன ஆட்சேபனைகள் செய்யப்படுகின்றன என்று கேள்வி கேட்கின்றனர்.

அவர்களுக்கு திருக்குர்ஆனை ஓதுவதன் பக்கம் கவனம் இருந்தால் பின்னர் அவர்களே அவற்றுக்கு பதிலளிக்க முடியும். அதுவின்றி நடைமுறை வாழ்க்கையில் எந்த ஒளியும் உருவாக முடியாது.

அன்னார் (அலை) கூறினார்கள்: இஸ்லாத்தின் சிறப்பு நடைமுறை உண்மையின் மூலம் உலகிற்கு வெளிப்பட வேண்டும் என்று நான் விரும்புகிறேன். திருக்குர்ஆன் நமக்குக் கற்றுத் தந்த போதனைகளை உங்களது நடைமுறையில் கொண்டு வந்து, அவை உண்மையானவையாகும் என்று நிரூபணம் செய்யுங்கள்.

அதனை வெறும் கதையாக கருதி ஓதாதீர்கள்; மாறாக, போதனையை புரிந்து ஓதுங்கள். மேலும் அதனை சிந்தியுங்கள். இந்த காலத்தில் தப்லீஃக் செய்வதற்கு பெண்களும் ஆண்களைப் போலவே முயற்சி செய்ய வேண்டும். இதுவே இன்றைய காலத்தின் ஜிஹாது ஆகும்.

கடந்த காலத்தில் நாம் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் உதாரணத்தை கொடுக்கின்றோம். மக்கள் அவர்களிடம் மார்க்க அறிவைப் பெற வருவார்கள். திருக்குர்ஆன் வசனங்களின் விளக்கங்கள், தஃப்ஸீர்கள் மற்றும் பல ஹதீஸ்களின் விளக்கங்களை ஸஹாபிகள் அன்னாரிடம் கற்றுக் கொண்டனர். எனவே, பெண்களும் தங்கள் அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

எனவே பெண்கள் தங்களது அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும்; மேலும், ஒவ்வொரு பதிலும் ஆண்களிடமிருந்து கிடைத்து விடும் என்று காத்திருக்காமல், சுயமே அவர்கள் அறிவிலும், ஞானத்திலும் எந்த அளவிற்கு முன்னேற வேண்டும் என்றால், ஆன்மிக விஷயங்களில் ஆண்களுக்கு நிகரானவர்களாக மட்டும் இருக்காமல் அவர்களை விடவும் முன்னேறிவிடுபவர்களாக பெண்கள் திகழ வேண்டும்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ

(அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு எவருமில்லை என்று சாட்சி கூறுகிறேன்) என்பது எத்தகைய நேசமிக்க வார்த்தை என்றால், இதே வார்த்தை யூதர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் வழங்கப்பட்டிருந்தால், அவர்கள் மார்க்கத்திலிருந்து விலகியிருக்க மாட்டார்கள். நீங்கள் இந்த மார்க்கத்தில் உறுதியாக நிலைத்திருக்க விரும்பினால் பின்னர் لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ என்பதை ஆழ்ந்து சிந்தியுங்கள்; மேலும் அதனை நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: நீங்கள் என்னுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்ட மக்கள் ஆவீர்கள். எனவே எங்களுக்கு நிராகரிப்பவர்களை காட்டிலும் நற்பேறு கிடைத்து விட்டது என்று இந்த விஷயத்தில் மட்டுமே பெருமை கொண்டு விடாதீர்கள்.

உண்மை என்னவென்றால், (வாழ்வளிக்கும்) அந்த நீரூற்றின் அருகில் தான் நீங்கள் வந்தடைந்துள்ளீர்கள். ஆனால், (அந்த நீரை) அருந்துவது மீதமிருக்கின்றது. எனவே (அந்த) நீர் அருந்துவதற்கு கூட

இதன் தொடர்ச்சி 9-ம் பக்கம்....

ஜுமுஆ பேருரை

நன்றியுணர்வு தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் தூய செயல் முன்மாதிரிகள்

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 28 ஆகஸ்ட் 2026** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1405 ஆண்டு **ஸஹ்ர்** மாதம் **28 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

மாநபி (ஸல்) அவர்களின் கொடியை உலகில் பறக்க வைப்பதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் வெளிப்படையானவையாகும்; இருப்பினும், தமது இந்தப் பணியை நிறைவேற்றுவதற்காக ஏதேனும் ஒரு வகையில் உதவிய தம்முடைய உதவியாளர்களுக்கு அன்னார் (அலை) மிகவும் நன்றியுடையவராக இருந்தார்கள்.

எனவே, ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் 1899-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 4-ஆம் தேதி வெளியிட்ட பிரசுரத்தில் (பொருளுதவிக்கு) ஓர் அழைப்பை விடுத்தார்கள்; அதில் நிதி உதவி வழங்கிய ஜமாஅத்தின் களங்கமற்ற நபர்களைப் பற்றி குறிப்பிட்டிருந்தார்கள்.

அன்னார் (அலை) கூறினார்கள்: அல்லாஹ்வின் நேசர்களின் ஒவ்வொரு குழுவிற்கும் அதன் தொடக்க நிலையில் சந்தாக்கள் தேவைப்படுவது இறைவனின் வழிமுறையாகும். நம்முடைய நபி (ஸல்) அவர்களும் பலமுறை சஹாபாவுக்கு சந்தாக்களை விதித்தார்கள்; அவர்களில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அனைவரையும் விட முந்தி நின்றார்கள். எனவே, மிகவும் வீரத்துடன், துணிச்சலுடன் உதவி செய்வதற்குத் தயக்கமின்றி அடியெடுத்து வைக்க வேண்டும். ஒவ்வொருவரும் தங்களின் வசதிக்கேற்ப - அந்த நேரத்தில் லங்கர் கானாவுக்காக (பொருளுதவிக்கு) அழைப்பு விடுத்தார்கள்; ஏனெனில், இதுவும் ஓர் இலக்காக இருந்தது. இஸ்லாத்தைப் பற்றிய செய்திகளைப் பெறவும், அன்னாருடைய வாதங்களைப் பற்றி கேட்கவும் விருந்தினர்கள் வருகை தந்து கொண்டிருந்தனர்.

அன்னார் (அலை) கூறினார்கள்: உங்களின் வசதிக்கேற்ப இந்த லங்கர் கானாவிற்கு (விருந்தினர் இல்லத்துக்கு) உதவுங்கள். சாத்தியமெனில், நாம் இந்த லங்கர் கானாவைப் பற்றிய கவலையிருந்து விடுபட்டு, நம்முடைய பணியில் மன நிறைவோடு ஈடுபடும் வகையில் ஓர் ஏற்பாடு அமைய வேண்டும் என்று விரும்புகிறேன். அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூதுச் செய்தியை உலகிற்குச் சேர்க்கும், அன்னாருடைய இஸ்லாத்தைப் பரப்புகின்ற பணியின் பக்கம் இன்னும் அதிகமாக கவனம் செலுத்த வேண்டும், இந்த நோக்கத்திற்காக வருகை தரும் விருந்தினர்களுக்குத் தனியானதோர் ஏற்பாடும் அமைய வேண்டும் என்றும் அன்னார் விரும்பினார்கள்.

எவ்வாறாயினும் அன்னார் கூறுகிறார்கள்: நாம் மன நிறைவுடன் தொடர்ந்து (பணிகளில்) ஈடுபட வேண்டும்; நம்முடைய நேரத்திலும் எவ்விதத் தடங்கலும் ஏற்படாமலிருக்க வேண்டும். மேலும், நமக்கு உதவி செய்பவர்கள் இறுதியில் அல்லாஹ்வின் உதவியைக் காண்பார்கள்.

பின்னர் அன்னார் (அலை) மேலும் கூறுகிறார்கள்: இதை என்னால் எழுதாமல் இருக்க முடியாது, இந்த உதவியிலும், தியாகத்திலும் முதல் தரத்தில் நம்முடைய தூய்மையான களங்கமற்றவர் இறைவழியில் என் அன்புத் தோழர் மவ்லவி ஹகீம் நூருத்தீன் ஸாஹிப் இருக்கிறார்; இவர் நிதி உதவி செய்தது மட்டுமன்றி, உலகத் தொடர்புகள் அனைத்தையும் உதறித் தள்ளிவிட்டு, எளிமையை மேற்கொண்டு, தம் சொந்த ஊரிலிருந்து ஹிஜ்ரத் செய்து, இறக்கும் நாள் வரைக்குமாக காதியானில் வந்து அமர்ந்துகொண்டார்; மேலும் எந்நேரமும் தயாராக இருக்கிறார். நான் விரும்பினால் கிழக்கிலோ அல்லது மேற்கிலோ அனுப்பி வைக்கலாம்; அதாவது இஸ்லாத்தின் தூதுச் செய்தியைக் கொண்டு சேர்ப்பதற்காக. என் பார்வையில் இவர்கள், பராஹீனே அஹ்மதிய்யாவில் 'அஸ்ஹாபுஸ் ஸுஃப்பா வமா அத்ராக மா அஸ்ஹாபுஸ் ஸுஃப்பா' என்று இறையறிவிப்பு அருளப்பெற்றவர்கள் ஆவர்; அதாவது அவர்கள் திண்ணைத்தோழர்கள்; திண்ணைத்தோழர்கள் யார்? என்பதை நீர் அறிவீரா!

பின்னர் கூறுகிறார்கள்: புகழத்தக்க அவருக்கு அடுத்து, இரண்டாம் தரத்தில் இறைவழியில் என் அன்புத் தோழர் மவ்லவி அப்துல்கரீம் சாஹிப் சியால்கோட்டி இருக்கிறார். அவருக்கோ தொடக்கத்திலிருந்தே இறைவன் உலகப் பதவிகள் மீதோ அல்லது உலகப் புகழின் மீதோ விருப்பத்தை அளிக்கவில்லை; ஆனால், இப்போது அவர் முற்றிலும் உலகியல் எண்ணங்களை விட்டும் விலகி இந்த வாசலில் வீற்றிருக்கிறார்; மேலும் இரவு பகலாகத் தம் மூளைக்குத் திறனுக்கு மீறிய வேலையைக் கொடுத்து மார்க்கத் தொண்டு ஆற்றி வருகிறார். ஜுமுஆ தொழுகையில் திருக்குர்ஆனின் பல உண்மைகளையும், நுட்பங்களையும் விளக்கி முஸ்லிம்களுக்குப் பயனளித்து வருகிறார். மவ்லவி ஹகீம் நூருத்தீன் சாஹிப் (ரலி) அவர்களின் நகரத்தைச் சேர்ந்தவரான ஹகீம் ஃபஸ்ல் தீன் சாஹிப் இருக்கிறார், அவரும் ஏறத்தாழ அதே இடத்தில் வசித்துக் கொண்டு தொண்டுகளில் ஈடுபட்டு வருகிறார். நம்முடைய ஒரு கலப்பற்ற நண்பர் டாக்டர் பூடே கான் சாஹிப் உலகை விட்டுச் சென்று விட்டார்; இருப்பினும், நன்றியளிக்கக்கூடிய விஷயம் என்னவெனில், மேலும் நான்கு களங்கமற்ற டாக்டர்கள், அதாவது, கலீஃபா ரஷீதுத்தீன் சாஹிப் லாஹோரீ, டாக்டர் மிர்ஸா யஃகூப் பேக் சாஹிப் கலானூரீ, டாக்டர் முஹம்மத் இஸ்மாயீல் சாஹிப் மற்றும் டாக்டர் அப்துல்ஹகீம் கான் சாஹிப் ஆகியோர் நம்முடைய ஜமாஅத்தில் உள்ளனர்.

அவ்வாறே, மிகச் சிறந்த களங்கமற்ற தன்மையுடன் இங்கு இருப்பிடத்தை அமைத்துக் கொண்ட சில களங்கமற்றவர்களும் உள்ளனர்; அவர்களுள் மிர்ஸா குதா பக்ஷ் சாஹிபும் ஒருவர் ஆவார். மேலும் சாஹிப்ஸாதா ஸிராஜுல் ஹக் சாஹிப் சர்சாவீ தம் சொந்த ஊரான சர்சாவாவிலிருந்து ஹிஜ்ரத் செய்து காதியானுக்கு வந்து விட்டார்; இன்னும் பல தோழர்களும் உள்ளனர். இந்தத் தோழர்கள் அனைவருக்கும் இந்த ஹிஜ்ரத்கள் நன்மையளிப்பதாக அமைய வேண்டும் என்று நாம் துஆ செய்கிறோம். மவ்லவி ஹகீம் நூருத்தீன் ஸாஹிப் (ரலி) அவர்களோ நம்முடைய இந்த அமைப்பின் ஓர் ஒளிவீசும் விளக்காக திகழ்கிறார்கள்; ஒவ்வொரு நாளும் திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸ் தர்ஸ் வழங்குகிறார்கள். மேலும் திருக்குர்ஆனின் நுட்பமான உண்மைகளை எவ்வளவு மிகுதியாக விளக்குகிறார்கள் என்றால், இது இறைவனின் உதவியில்லை எனில், வேறு என்ன?

ஹஸ்ரத் மவ்லவி ஸாஹிப் அவர்கள் மற்றும் இறைவழியில் என் அன்புத் தோழர் மவ்லவி அப்துல்கரீம் அவர்கள் ஆகிய இருவரும் காதியானிலேயே தங்களின் வாழ்வும் காதியானிலேயே தங்களின் மரணமும் அமைய வேண்டும் என்று முழு மனதுடன் விரும்புகிறார்கள். மேலும், நம்முடைய ஜமாஅத்தில் வர்த்தக வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள களங்கமற்றவர்களின் குழுவில், புகழத்தக்கவரான இறைவழியில் என் அன்புத் தோழர் மதராஸைச் சேர்ந்த வாணிபர் சேட் அப்துர் ரஹ்மான் சாஹிபும் ஒருவர் ஆவார். இவர் நன்மைக்கான பல வாய்ப்புகளைப் பெற்றுள்ளார்; மேலும் எந்த அளவுக்குப் பேரார்வமிக்க அன்பராக திகழ்கிறார் என்றால், இவ்வளவு தொலைவில் வசிக்கும்போதிலும் அருகில் இருக்கிறார். நம்முடைய அமைப்பின் லங்கர் கானாவிற்குப் பெருமளவில் உதவி செய்து வருகிறார். அன்பு, நம்பிக்கை மற்றும் உறுதியான ஈமான் நிறைந்த அவருடைய உண்மைத்துவம் மற்றும் தொடர்ச்சியான தொண்டுகள் ஜமாஅத்தின் வசதிமிக்க அனைத்து மக்களுக்கும் ஒரு முன்மாதிரியாகும்; ஏனெனில் இத்தகையவர்கள் மிகச் சிலரே உள்ளனர். அவர் எவ்விதத் தடையுமின்றி மாதம் நூறு ரூபாய் அனுப்பி வருகிறார்; மேலும் இன்று வரை பலமுறை தம்முடைய அன்பு மற்றும் களங்கமற்றத் தன்மையின் ஆர்வ மிகுதியினால் ஐந்நூறு ரூபாய் வரை அனுப்பி வந்துள்ளார். மார்க்கத்தைப் பரப்புவதற்காகவும் விருந்தினர்களைப் பராமரிப்பதற்காகவும் சேட் சாஹிப் அனுப்பி வந்த இந்தத் தொகை அந்த காலத்தில் மிகப்பெரிய தொகையாகும்; மேலும் மாதம் தோறும் அனுப்பி வந்த நூறு ரூபாய் இது அல்லாமல் கூடுதல் ஆகும். அவ்வாறே, இறைவழியில் என் அன்புத் தோழர் லாஹோரின் வாணிபர் ஷேக் ரஹ்மத்துல்லாஹ் ஸாஹிப், லாஹோரின் சேட் சாஹிப் ஆவார். குறிப்பிடப்பட்ட ஷேக் சாஹிப் மனமார

நம்முடைய அன்பராக இருக்கிறார் என்பதை நான் நன்கு அறிவேன்; என் மீது தொடரப்பட்ட குற்றவியல் வழக்குகளில் தம்முடைய பெருந்தொகையைக் கொண்டு எனக்கு உதவி செய்தார்; மேலும் அன்பின் ஆர்வத்தால் மெய்மறந்து அலைந்து திரிந்து என் மீது அனுதாபம் காட்டி வந்தார். இப்போது அவர் நம்முடைய பணிக்காக நூற்றுக்கணக்கான ரூபாய்களைச் செலவிட்டு லண்டனில் வீற்றிருக்கிறார்; இறைவன் அவரை மிக விரைவில் நலமுடனும், பாதுகாப்புடனும் திரும்பக் கொண்டுவருவானாக. இது, அவர் லண்டன் சென்றிருந்த நேரத்து நிகழ்வாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: இறைவழியில் என் அன்புத் தோழர் சர்தார் நவாப் முஹம்மத் அலீ கான் சாஹிப் அவர்களும் அன்பு மற்றும் களங்கமற்றத் தன்மையில் மிகுந்த வளர்ச்சி அடைந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது; மேலும் அவர் மிக விரைவில் பொறாமைப்படத்தக்க களங்கமற்றத் தன்மை மற்றும் அன்பின் கோபுரத்தை அடைவார் என்பதற்கு சரியான நுண்ணறிவு சான்றளிக்கிறது. அவர் எப்போதும் இயன்ற வரை நிதி உதவியிலும் பயன்பட்டு வந்துள்ளார்; மேலும் அவர் இதை விட அதிகமாகவும் இறைவழியில் தம் செல்வங்களை அர்ப்பணிப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இறைவன் ஒவ்வொருவரின் செயல்களையும் பார்க்கிறான். மேலும்,நான் சொல்லவோ எழுதவோ வேண்டிய தேவையில்லை.

அவ்வாறே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: பல களங்கமற்றவர்கள் உள்ளனர்; ஆனால் வருந்தத்தக்க வகையில் நான் பெயர்களை எழுதத் தொடங்கினால் - இது அன்னார் வெளியிட்ட பிரசுரம் என்பதால் - மிகப் பெரிய கட்டுரையாக மாறிவிடும். அவர்கள் அனைவரின் நலனுக்காகவும் நான் துஆ செய்கிறேன்; இறைவன் அவர்களுக்கு இரு உலகங்களின் மகிழ்ச்சியையும் அருள்வானாக! அவர்கள் இறைவனுக்காக என்ன செய்கிறார்களோ அல்லது இனிவருங்காலத்தில் செய்வார்களோ அவை அனைத்தும் இறைவனின் பார்வைக்கு உட்பட்டவையாகவே இருக்கின்றன என்று கூறினார்கள். (மஜ்மூஆ இஷ்திஹாராத், தொகுதி 2, பக்கம் 542 - 546, 2019-ம் ஆண்டு பதிப்பு)

மாநபி (ஸல்) அவர்களின் உண்மை ஊழியர் தம் உதவியாளர்கள் மீது நன்றியுணர்வை வெளிப்படுத்துதலுக்கான வழிமுறைகளாக இவை அமைந்திருந்தன. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள், எவரேனும் செய்திடும் மிகச் சிறிய தொண்டாக இருந்தாலும் கூட, அளப்பரிய நன்றியினைத் தெரிவிப்பார்கள். எனவே ஹஸ்ரத் முன்ஷீ மஹ்பூப் ஆலம் ஸாஹிப் கூறுகிறார்கள்: நம்முடைய பகுதியில் அஹ்மதி அல்லாத ஒருவர் இருந்தார்; அவர் ஃபாலூடா தயாரித்து வந்தார். ஹஸ்ரத் (அலை) அவர்கள் காஜா கமாஅலுத்தீன் சாஹிப் அவர்களின் இல்லத்திற்கு வருகை தந்தபோது, அந்த ஃபாலூடா தயாரிப்பவர் என்னிடம், 'ஹுஸூர் அவர்களிடம் அனுமதி வாங்கித் தந்தால், நான் ஹுஸூர் அவர்களுக்கு ஃபாலூடா வழங்க விரும்புகிறேன்' என்று கூறினார். எனவே அவர் ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களின் மேலான அவையில் கேட்டுக் கொண்டார். நான் பணிவுடன் கேட்டுக் கொண்டதும் ஹுஸூர் அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். அதன்படியே அவர் அனைத்துப் பொருட்களையும் எடுத்துக் கொண்டு அங்கு வந்து சேர்ந்தார் என்று கூறுகிறார்.

ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்கள் காஜா கமாலுத்தீனின் முற்றத்தில் இருந்த கட்டிலில் வீற்றிருந்தார்கள். நான் அவரை அறிமுகப்படுத்தினேன்; ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களிடம் முன்பே தெரிவிக்கப்பட்டிருந்ததால், ஃபாலூடா செய்யுமாறு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள். எனவே அவர் வெளியே அமர்ந்து, ஒரு கிண்ணம் ஃபாலூடா தயார் செய்து ஹுஸூர் அவர்களுக்கு வழங்கினார். ஹுஸூர் அவர்கள் அதனைப் பருகி, 'மிக நன்றாக இருக்கிறது' என்று பாராட்டினார்கள்.

பின்னர் அவர் பத்து பன்னிரண்டு கிண்ணங்களை உள்ளே அனுப்பி அனைவருக்கும் பருகக் கொடுத்தார். இதன் பொருட்டு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் இரண்டு ரூபாய்களை எடுத்து என்னிடம் கொடுத்து, 'இதை அவரிடம் கொடுத்துவிடுங்கள்' என்று கூறினார்கள். அந்த காலத்தில் அதற்குப் பெரிய மதிப்பு இருந்தது. நான் அந்த இரண்டு ரூபாய்களுடன் அவரிடம் சென்றேன். அவர் வாங்க மறுத்து, 'என்னை ஹஸ்ரத் ஸாஹிப் அவர்களின் சமூகத்திற்கு அழைத்துச் செல்லுங்கள்' என்று என்னிடம் கூறினார். அதன்படியே நான் அவரை ஹஸ்ரத் அவர்களின் சமூகத்திற்கு அழைத்துச் சென்றேன். அவர் ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்களுக்கு முன்னால் கைகளைக் கூப்பி, 'எனக்கு இரண்டு ரூபாய் தேவையில்லை; நான் அன்பு பரிமாற்றமாகவே ஃபாலூடாவை வழங்கினேன்' என்று கூறினார். அவருடைய வற்புறுத்தலால் ஹஸ்ரத் ஸாஹிப் அவர்கள் அந்த ரூபாய்களைக் வழங்காமல், அவருக்காக துஆவும் செய்து 'ஜஸாகுமுல்லாஹு அஹ்ஸனல் ஜஸா' என்றும் கூறினார்கள். அந்த இளைஞனுக்குக் கிடைத்த துஆவின் பரக்கத்தினால், அவருடைய பிள்ளைகள் மிகச் சிறந்த பதவிகளில் வீற்றிருக்கிறார்கள் என்று இவர்கள் கூறுகிறார்கள். (ரிவாயாத்தே அஸ்ஹாபே அஹ்மது, தொகுதி 4, பக்கம் 278 - 279)

ஹஸ்ரத் மவ்லவி இப்ராஹீம் ஸாஹிப் பகாபூரீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

ஒருமுறை ஹஸ்ரத் மீர் ஹாமித் ஷா ஸாஹிப் மர்ஹூம், சௌத்ரி நஸ்ருல்லாஹ் கான் ஸாஹிப் மர்ஹூம் மற்றும் எளியவனாகிய நான் ஆகியோர் அடங்கிய சியால்கோட் ஜமாஅத், சில ரூபாய்களை அன்பளிப்பாக ஹுஸூர் அவர்களின் சமூகத்தில் வழங்கினோம். ஹஸ்ரத் (அலை) அவர்கள் ரூபாய் முடிச்சுப் போடப்பட்டிருந்த கைக்குட்டையைப் பெற்றுக் கொண்டு, முதலில் 'அல்ஹம்துலில்லாஹ்' என்றும் பின்னர் 'ஜஸாகுமுல்லாஹ்' என்றும் கூறினார்கள். இதனால் எங்களுடைய ஈமானில் ஒருவித முன்னேற்றம் ஏற்பட்டது; ஏனெனில், ஹுஸூர் அவர்கள் முதலில் இறைவனுக்கு நன்றி செலுத்தினார்கள்; பின்னர் எங்களுக்காக துஆ செய்தார்கள். (ரிவாயாத்தே அஸ்ஹாபே அஹ்மது, தொகுதி 4, பக்கம் 56)

முதலில் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துங்கள், பின்னர் மனிதர்களுக்கு நன்றி தெரிவியுங்கள் என்று ஹுஸூர் அவர்கள் கூறியதை முன்பும் ஒருமுறை நான் குறிப்பிட்டுள்ளேன். (ஹயாத்தே குத்ஸீ, பக்கம் 134)

ஒரு நிகழ்வை ஹஸ்ரத் ஸூல்ஃபிகார் அலீ கான் கோஹர் ஸாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஒருமுறை ஹுஸூர் அவர்கள் கீழ் அடுக்கில் உள்ள பைத்துத் துஆவில் மருதாணி வைத்திருந்ததன் காரணமாக ஏறத்தாழ பத்து மணிக்கு, வெளியே வருகை தந்தார்கள். பைத்துத் துஆவை ஒட்டி ஒரு சிறிய அறை இருந்தது; அதனுடைய ஒரு கதவு - தாடி மற்றும் தலைமுடியில் நிறம் பூசியிருந்தார்கள்; ஃஹிஸாப் பூசியிருந்தார்கள். அந்த காலத்தில் மருதாணி வைக்கும் வழக்கம் இருந்தது. எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் அதனை வைப்பார்கள். மருதாணி வைக்கப்பட்டிருந்த நிலையில் அவர்கள் வருகை தந்தார்கள் என்று கூறுகிறார். ஒரு கதவு முற்றத்தில் திறந்தது, மற்றொரு கதவு என்னுடைய அறையின் பக்கம் இருந்தது. அவர் கூறுகிறார்: அருகில் வசித்து வந்ததன் காரணமாக, அந்தச் சிறிய அறையில் ஹுஸூர் அவர்களின் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தேன்; அப்போது ஹுஸூர் அவர்கள் பைத்துத் துஆவிலிருந்து வெளியே வருகை தந்து கட்டிலில் அமர்ந்து கொண்டார்கள். என்னிடம், 'மவ்லவி சய்யித் சர்வர் ஷாஹ் சாஹிபிடம் கூறி நமக்காகச் சிறிது உணவை இங்கு எடுத்துவரச் சொல்லுங்கள்' என்று கூறினார்கள். அந்தக் காலத்தில் விருந்தினர்கள் வந்திருந்ததால் உணவு ஒன்றாகச் சமைக்கப்பட்டது; சர்வர் ஷாஹ் சாஹிப் அவர்களின் பொறுப்பில் ஏற்பாடுகள் இருந்தன. நான் சென்று பணிவுடன் கூறினேன்; அந்த நேரத்தில்தான் நாங்கள் உணவு உண்டு முடித்திருந்தோம். மிஞ்சி மிஞ்சி போனால் பத்து நிமிடங்கள் கழிந்திருக்கும், ஆனால் உணவு எதுவும் மீதமிருக்கவில்லை. பத்து நிமிடங்களுக்கே பிறகும் தீர்ந்து போயிருந்தது, உணவு இருக்கவில்லை. மக்கள் உண்டு முடித்திருந்தனர். நான் செய்தியைக் கூறியதும் மவ்லவி சர்வர் ஷாஹ் ஸாஹிபின் முகம் வெளிறிப்போனது.

எவ்வாறாயினும், அவர் ஒரு சிறிய கிண்ணத்தில் பாலையும், மூன்று சுட்ட Bread - களை ஒரு தட்டிலும் வைத்து, சர்க்கரையுடன் எடுத்துவந்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் உணவு கேட்டிருக்க உணவு இல்லையே என்று அவர் முகம் வாடி மிகவும் துயருற்றிருந்தார். 'ஹுஸூர்! இந்த நேரத்தில் வேறு எதுவும் மீதமில்லை' என்று அவர் பணிவுடன் கூறினார். எனக்குக் கடும் வியப்பு ஏற்பட்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்காக உணவு வைக்கப்படவில்லையே! இது என்னவிதமான ஏற்பாடு! என்று எனக்குக் கடும் வியப்பு ஏற்பட்டது என்று ஸூல்ஃபிகார் அலீ கான் ஸாஹிப் கூறுகிறார்.

ஹுஸூர் அவர்களின் முகத்தில் வெளிப்பட்ட மிகுந்த நன்றியுணர்வு - இது ஏதோ வெளிப்புறத் தோற்றத்திற்காகவோ அல்லது செயற்கையானதாகவோ இருக்கவில்லை. மாறாக, முகத்திலும் வெளிப்பட்ட நன்றியுணர்வின் வெளிப்பாடாக இருந்தது - அந்த இரண்டு டோஸ்ட் Bread களை எடுத்துச் சர்க்கரையில் தொட்டு உண்டுவிட்டு, அதற்கு மேல் தண்ணீரைக் குடித்துக் கொண்டார்கள் என்று கூறுகிறார். அந்த நேரத்தில், ஹுஸூர் அவர்களின் பொறுமையையும், நன்றியுணர்வையும், உயர்த்தரத்தையும் உலகிற்கு வெளிப்படுத்துவதற்காகவே அல்லாஹ் இந்த மறதியை ஏற்படுத்தினான் என்ற எண்ணம் எனக்கு வந்தது என்று கூறுகிறார். (ரிவாயாத்தே அஸ்ஹாபே அஹ்மது, தொகுதி 3, பக்கம் 54)

ஸஹாபா பெருமக்கள் சிறிய சிறிய விஷயங்களையும் குறித்து வைத்து வந்தார்கள்.

1900-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7-ஆம் தேதி ஹுஸூர் அவர்கள் ஹஸ்ரத் நவாப் முஹம்மத் அலீ கான் ஸாஹிப் (ரலி) அவர்களுக்கு நன்றிக் கடிதம் எழுதியவாறு இவ்வாறு கூறினார்கள்:

அன்னார் உடைகளை அன்பளிப்பாக அனுப்பியிருந்தார்கள்: 'தாங்கள் மிகுந்த அன்போடும், களங்கமற்றத் தன்மையோடும் வழங்கிய உன்னதமான மற்றும் உயர்தர உடைகளின் அன்பளிப்பு எனக்குக் கிடைத்து விட்டது; அதற்கு நன்றி செலுத்துகிறேன்.

திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

ஒவ்வொரு ஆடையைப் பார்க்கும்போதும், நேசமிக்க தாங்கள் மிகுந்த உழைப்போடும், கலப்பற்ற தன்மையோடும் அவற்றை ஆயத்தம் செய்துள்ளீர்கள் என்பதை அறிய முடிகிறது. அல்லாஹ் இதற்குப் பகரமாகத் தன்னுடைய அளப்பரிய மற்றும் அறியப்படாத கருணையையும், அருளையும் தங்கள் மீது பொழிவானாக! மேலும் 'லிபாஸுத் தக்வாவை' (இறையச்ச ஆடையைக்) கொண்டு, முழுமையான முறையில் இறைநேசர்கள் மற்றும் நல்லடியார்களின் நிறத்தால் உங்களைச் சிறப்பிப்பானாக!' (அஸ்ஹாபே அஹ்மது, தொகுதி 2, பக்கம் 686- 687)

இப்போது இந்த வெளிப்புற ஆடையை அன்னாருக்கு வழங்கியதும், அன்னார் (அலை) அதற்கு நன்றி செலுத்தியதோடன்றி, அதற்கு வழங்கிய பதிலில் கூறினார்கள்: அல்லாஹ் உங்களுக்கு இறையச்ச ஆடையை முழுமையாக வழங்கி, நல்லடியார்களின் நிறத்தில் சிறப்பிப்பானாக! என்று துஆவும் செய்தார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஹஸ்ரத் முன்ஷீ அஹ்மத் ஜான் சாஹிப் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடுகிறார்கள்: என் மதிப்பிற்குரியவரே! கண்ணியத்திற்குரிய என் சகோதரர் முன்ஷீ அஹ்மத் ஜான் ஸாஹிப் அவர்களே! ஸல்லமஹுல்லாஹு தஆலா வஜஸாகுமுல்லாஹு கைரல் ஜஸா. அஸ்ஸலாமு அலைக்கும். தங்களின் அன்புக் கடிதம் கிடைத்தது. இந்த அடியாரிலும் எளியவனுக்கு, எந்த மனிதர்களின் வருகை என் போன்ற ஒன்றுமில்லாதவனுக்கு கண்ணியத்திற்கும், பெருமைக்கும் காரணமாக அமைந்ததோ, அத்தகைய மனமார்ந்த அன்பர்களை ஏற்படுத்தித் தந்த கருணையுள்ள இறைவனின் அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்த முடியாது. கருணையுள்ள இறைவன் உங்களை மகிழ்ச்சியுடனும் நலமுடனும் வைப்பானாக!; மேலும் இந்த மனமார்ந்த கவனம் செலுத்துதலுக்கான நற்பலனை உங்களுக்கு வழங்குவானாக! இந்த எளியவன் மிகவும் - மிகவும் பணிவுடன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: இந்த எளியவன் மிகவும் பலவீனமானவன், பயனற்றவன், அற்பமானவன்; மேலும் அர்ஹமுர் ராஹிமீன் (கருணையாளர்களில் எல்லாம் மிகப் பெரும் கருணையாளன்) தன்னுடைய முழுமையான கொடையினாலும் பேரருளினாலும், இந்தத் தகுதியற்றவன் மீது எள்ளளவும் தகுதியன்றி ஏராளமான அருட்கொடைகளைப் பொழிந்து கொண்டிருக்கிறான். தவறுகளுக்கு மேல் தவறுகளைக் காண்கிறேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் அந்த அந்தஸ்தைப் பாருங்கள், பின்னர் அன்னாரின் பணிவைப் பாருங்கள்! அன்னார் கூறுகிறார்கள்: தவறுகளுக்கு மேல் தவறுகளைக் காண்கிறேன். அல்லாஹ்வோ பேரருளுக்கு மேல் பேரருள் புரிகிறான். அநீதிக்கு மேல் அநீதியைக் காண்கிறான் - அல்லாஹ் என்னிடம் அநீதிக்கு மேல் அநீதியைக் காண்கிறான், கொடைக்கு மேல் கொடை வழங்குகிறான். உண்மையிலேயே அவன் மிகுந்த கருணையாளன்; கொடையாளன்; அவனுக்கு நன்றி செலுத்துவதற்குரிய நாவை நான் எங்கிருந்து கொண்டு வருவேன்? இந்த எளியவன் ஒன்றுமில்லாதவன்; தாழ்ந்தவன், தகுதியற்றவன்; முற்றிலும் ஏழை; அவன் என்னை மண்ணில் கண்டு தூக்கி எடுத்தான்; முற்றிலும் தகுதியற்றவனாகக் கண்டு என் குறைகளை மறைத்தான். என் பலவீனத்தைக் கண்டு எனக்கு, தானே ஆற்றலை வழங்கினான்; என் அறியாமையைக் கண்டு எனக்கு, தானே அறிவை அளித்தான். என்னால் எண்ணிப் பார்க்க முடியாத அருட்கொடைகளை என் நிலைமைக்கு அளித்தான்; அவனுடைய அருட்கொடைகளின் ஓர் வெளிப்பாடே, உங்களைப் போன்ற பெரிய சகோதரர்களின் உள்ளங்களில் இந்த அற்பமானவனின் அன்பைப் போட்டதாகும். உதவியாளர்களுக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் எவ்வாறு நன்றியுணர்வை வெளிப்படுத்துகிறார்கள் பாருங்கள்! எனவே அவனுடைய அருட்கொடைகளுடனேயே தொடர்பு உள்ளது; அவன் இந்த ஹுப், அதாவது, அன்பை வளர்ப்பான், மேலும் இந்த வரிசையில் இணைக்கப்பட்ட அனைவர் மீதும் அருள் புரிவான். இந்தக் கடிதத்தை எழுதிய பிறகு ஒரு சான்றோரின் இந்தக் கவிதை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு இறையறிவிப்பாக அருளப்பெற்றது:

அளவு கடந்த நேசத்தினால் உள்ளம் உயிர்ப்பிக்கப்பெற்ற மனிதன் ஒருபோதும் இறப்பதில்லை; உலகப் பதிவேட்டில், அதாவது, உலக வரலாற்றில் நம்முடைய நிலையான வாழ்வு பொறிக்கப்பட்டுவிட்டது. (மக்தூபாத்தே அஹ்மது, தொகுதி 3, பக்கம் 25 - 26)

அவ்வாறே ஹஸ்ரத் காஜி ஸஹீருத்தீன் அக்மல் ஸாஹிப் (ரலி) அவர்களுக்கு எழுதிய தமது ஒரு கடிதத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் குறிப்பிடுகிறார்கள் - ஆதரவாக சில நூல்களை அவர் அனுப்பியிருந்தார்: 'தங்களின் மூன்று நூல்களும் தங்களிடமிருந்து அன்பளிப்பாக எனக்குக் கிடைத்தன. ஜஸாகுமுல்லாஹு கைரா. மூன்றையும் சிறிது சிறிதாகப் பார்த்துவிட்டேன். உயர்த்தரமான, ஆதாரப்பூர்வமான விளக்கமாக உள்ளது. இறைவன் நற்பலனை அருள்வானாக! ஆமீன்! இரட்டிப்பு நன்மை கிடைக்கும் வகையில், ஒவ்வொரு தக்க சூழலிலும், சந்தர்ப்பத்திலும் இதனைத் தாங்கள் பரப்ப வேண்டும்.' (மக்தூபாத்தே அஹ்மது, தொகுதி 5, பக்கம் 245)

இதேபோன்று டாக்டர் கலீஃபா ரஷீதுத்தீன் ஸாஹிப் அவர்களுக்கு இப்படி ஒரு கடிதம் எழுதினார்கள்: 'என் அன்பரே! என் சகோதரரே! டாக்டர் கலீஃபா ரஷீதுத்தீன் சாஹிப் அவர்களுக்கு! ஸல்லமஹு - ஹஸ்ரத் கலீஃபா ரஷீதுத்தீன் ஸாஹிப் ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் ஸானீ (ரலி) அவர்களின் மாமனாராகவும் ஹஸ்ரத் உம்மு நாஸிர் அவர்களின் தந்தையாகவும் இருந்தார் - அன்னார் (அலை) கூறினார்கள்: என் அன்பரே! என் சகோதரரே! டாக்டர் கலீஃபா ரஷீதுத்தீன் ஸாஹிப் அவர்களே! அஸ்ஸலாமு அலைக்கும். தாங்கள் அனுப்பிய 50 ரூபாய் தொகை எனக்குக் கிடைத்தது. பொறாமை குணமுடைய தீயவர்கள் நீதிமன்றத்தில் என் மீது வழக்குத் தொடுத்துள்ள இத்தகைய நெருக்கடியான, அவசியமான நேரத்தில் தாங்கள் தொடர்ச்சியாக நிதி உதவி செய்வது நன்றியுணர்வுக்குரியதாகும். ஜஸாகுமுல்லாஹு கைரல் ஜஸா.'

பின்னர் வழக்கின் தேதியை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் குறிப்பிடும்போது, '1899-ஆம் ஆண்டு பிப்ரவரி 24-ஆம் தேதி' என்று கூறி, 'அநேகமாக, ஞாயிற்றுக்கிழமை பெருநாள் வரும், அடுத்த நாள் திங்கள்கிழமை பதான்கோட் என்ற இடத்திற்கு வழக்கிற்காகச் செல்ல வேண்டியிருக்கும், வல்லாஹு அஃலம்' என்று கூறினார்கள்.

மேலும் கூறுகிறார்கள்: 'உங்களுக்காகச் சில காலம் துஆ செய்து கொண்டே இருப்பேன் என்று இப்போது நான் உறுதிபூண்டுள்ளேன். நன்றியுணர்வின் வெளிப்பாடாக, உங்களுக்காகச் சில காலம் துஆ செய்துகொண்டே இருப்பேன். அல்லாஹ் இந்தத் தொலைதூரப் பிரிவிலிருந்து நலமுடனும் பாதுகாப்புடனும் உங்களுக்கு விடுதலை அருள்வானாக என்று அன்னார் கூறினார்கள் - ஏனெனில் தொலைதூரப் பகுதியில் அவருக்குப் பணி நியமனம் செய்யப்பட்டிருந்தது; அங்கிருந்து வர விரும்பினார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள், 'உங்களுக்கு நலமுடனும் பாதுகாப்புடனும் விடுதலை அருள்வானாக! ஆமீன் சும்ம ஆமீன்' என்று கூறினார்கள். (மக்தூபாத்தே அஹ்மது, தொகுதி 4, பக்கம் 214)

அவ்வாறே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஹஸ்ரத் ஸாஹிப்ஸாதா ஸிராஜுல் ஹக் ஸாஹிப் அவர்களுக்கு எழுதிய தமது கடிதத்தில் குறிப்பிடுகிறார்கள்: 'என் சகோதரர் மதிப்பிற்குரிய சாஹிப்ஸாதா ஸிராஜுல் ஹக் சாஹிப் அவர்களுக்கு! அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரகாத்துஹு. தங்களின் அன்புக் கடிதம் கிடைத்தது. தாங்கள் தலைப்பாகையையும் (அத்தர்) நறுமணத்தையும் அன்பளிப்பாக வழங்கியுள்ளீர்கள் - சிறிய பொருளாக இருந்தாலும், அதற்காகவும் கடிதம் எழுதி நன்றி தெரிவிக்கிறார்கள் - இந்த நட்பார்ந்த அன்பளிப்புக்கு உங்களுக்கு நன்றி செலுத்துகிறேன். ஜஸாகுமுல்லாஹு கைரல் ஜஸா வ அஹ்ஸன அலைக்கும் ஃபித் துன்யா வல் உக்பா. இறைவன் உங்களை மிகவும் மகிழ்ச்சியாக வைப்பானாக! மேலும் உலகம் மற்றும் மார்க்கத்தின் துன்பங்களை விட்டும் உங்களைப் பாதுகாப்பானாக!' (மக்தூபாத்தே அஹ்மது, தொகுதி 3, பக்கம் 110)

நன்றியுணர்வுடன் சேர்ந்து அவர்களின் மார்க்க முன்னேற்றத்திற்காகவும் ஒவ்வொருவருக்காகவும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் துஆ செய்து வந்தார்கள்.

ஹஸ்ரத் மவ்லவி நூருத்தீன் ஸாஹிப் (ரலி) அவர்கள் கூறி வந்ததாக, ஸய்யித் மஹ்மூத் ஆலம் சாஹிப் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் அரபியில் ஈதுல் அல்ஹா குத்பா வழங்கியபோது, பின்னர் அதைப் பற்றிய நிலை கேட்கப்பட்டதற்கு - அதாவது, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களிடம் கேட்கப்பட்டபோது - ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறினார்கள்: 'வானவர்கள் எனக்கு முன்னால் தடித்த எழுத்துக்களில் எழுதப்பட்ட பலகையைக் கொண்டு வந்துகொண்டே இருந்தார்கள்; அதை நான் பார்த்துப் பார்த்து படித்துக் கொண்டே சென்றேன். ஒரு பலகை வரும், அதை நான் படித்துக்காட்டி முடித்ததும் மற்றொரு பலகை வரும், முதலாவது பலகை சென்றுவிடும்; இவ்வாறு பலகைகளின் வரிசை தொடர்ந்தது. எழுதுபவர் யாரேனும் மீண்டும் கேட்கும்போது - ஏனெனில் எழுதுவதற்காக இரண்டு நபர்களை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் அமர்த்தியிருந்தார்கள் - சென்றுவிட்ட அந்தப் பலகை மீண்டும் திரும்பி வந்துவிடும்; அதனைப் பார்த்து நான் கூறிவிடுவேன் என்று கூறினார்கள்.

இந்தக் குத்பா முடிந்ததும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஸஜ்தா ஷுக்ரில் (நன்றி ஸஜ்தாவில்) விழுந்தார்கள். அன்னாருடன் வருகை தந்திருந்த அனைவரும் ஸஜ்தா ஷுக்ர் செய்தார்கள். ஸஜ்தாவிலிருந்து தலையை உயர்த்தியதும் ஹஸ்ரத் அக்தஸ் அவர்கள், 'இப்போது சிவப்பு நிறத்தில் 'முபாரக்' (வாழ்த்துகள்) என்று எழுதப்பட்டிருந்ததைக் கண்டேன்; இது ஏற்றுக் கொள்ளப்பட்டதன் அடையாளமாகும்' என்று கூறினார்கள். (தக்கிரா பக்கம் 334 - 335, அடிக்குறிப்பு, 2023-ம் ஆண்டு பதிப்பு)

ஹஸ்ரத் மியான் ஃபீரோஸுத் தீன் ஸாஹிப் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் 'லெக்சர் சியால்கோட்' உரையை மீர் ஹுஸாமுத்தீன் சாஹிப் அவர்களின் வீட்டின் மாடியில் வைத்து எழுதினார்கள். நான்கு மைக்கூடுகள் நான்கு சுவர்களின் மீதும் வைக்கப்பட்டிருந்தன - சிறிய

நபிமொழியிலிருந்து...

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

சுவராக இருந்தது. அதன் மீது மைக்கூடுகள் வைக்கப்பட்டிருந்தன - மேலும் எழுதும்போது உலாவிக்கொண்டே எழுதி விடுவார்கள். அவர் கூறுகிறார்: ஏறத்தாழ அஸ்ர் நேரமாக இருந்தது; ஹுஸூர் அவர்கள் உலாவிக்கொண்டே எழுதுவார்கள், சில வேளைகளில் சஜ்தாவில் விழுந்துவிடுவார்கள் - அதாவது அந்த நேரத்தில் ஏதேனும் சிறப்புரையை அல்லாஹ் உணர்த்துவான் போலும். எனவே, ஸஜ்தா ஷுக்ர் செய்வார்கள்; எழுதிக் கொண்டிருக்கும்போதே நிறுத்திவிட்டு சஜ்தாவில் விழுந்துவிடுவார்கள்.

அவர் கூறுகிறார்: இந்த முழு காட்சியையும் நாங்கள் எங்களுடைய வீட்டின் மொட்டை மாடியில் நின்றுகொண்டு பார்த்தோம். இன்னும் பல மக்களும் இந்தக் காட்சியைக் காண்பதற்காகவே எங்களுடைய வீட்டில் கூடியிருந்தார்கள். எங்களுடைய வீடு அந்த வீட்டிற்கு அருகில் இருந்ததுடன் உயரமாகவும் இருந்ததால், அன்னார் எவ்வாறு நூல் எழுதுகிறார்கள், எவ்வாறு உடனுக்குடன் அல்லாஹ்வுக்கு நன்றியையும் செலுத்துகிறார்கள் எனும் இந்த முழு காட்சியும் தென்பட்டது. (ரிவாயாத்தே அஸ்ஹாபே அஹ்மது, தொகுதி 4, பக்கம் 375)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் நன்றியுணர்வு எனும் நற்பண்பைக் குறிப்பிடும்போது, ஒரு ஸஹாபி ஹஸ்ரத் கைருத்தீன் ஸாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

ஒருமுறை எங்களுடைய கிராமமான காதிராபாத்திற்கு மஸீஹ் (அலை) அவர்கள் வருகை தந்தபோது, என் தாயார் தாஜ் பீபீ சாஹிபா அவர்கள் தட்டு நிறையச் சர்க்கரையை நிரப்பிக் கொடுத்தார்கள். ஹுஸூர் அவர்கள் அந்தச் சர்க்கரையை என் பாட்டியின் மடியில் போட்டு - அந்த நேரத்தில் அவருடைய பாட்டி அமர்ந்திருந்தார், அவருக்கு அதைக் கொடுத்து விட்டு - 'ஜஸாகுமுல்லாஹ்' என்று கூறி எங்களுக்காகத் துஆ செய்தார்கள். (ரிவாயாத்தே அஸ்ஹாபே அஹ்மது, தொகுதி 3, பக்கம் 89)

மிகச் சிறிய பொருளாக இருந்தாலும் கூட நன்றி செலுத்தினார்கள்.

ஹாஜீ முஹம்மத் தீன் சாஹிப் அறிவிக்கிறார்கள்: ஒருமுறை ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஏதோ ஒரு நிகழ்விற்காக சியால்கோட்டுக்கு வருகை தருகிறார்கள் என்பது எளியவனுக்குத் தெரியவந்தது; குறிப்பிட்ட நாளில் நானும் பார்க்கும் ஆர்வத்தில் அங்கு சென்றடைந்தேன். ஹுஸூர் அவர்கள் ஒரு வீட்டின் மேல்அடுக்கில் வீற்றிருந்தார்கள்; விளக்கைச் சுற்றும் விட்டில் பூச்சிகளைப் போல மக்கள் கூட்டம் கீழே, காணக் கிடைப்பதற்காகக் காத்திருந்தது. அதற்குள் ஹுஸூர் (அலை) அவர்கள் கீழே வருகை தந்தார்கள். வருகை தந்திருந்த மக்களுக்குத் தங்களைக் காணும் பேற்றினை வழங்கி மகிழ்வித்தார்கள்.

ஒரு முதியவர் ஹுஸூர் (அலை) அவர்களைச் சந்தித்தபோது கதறி அழத் தொடங்கினார். ஹுஸூர் அவர்கள் அவருக்கு ஆறுதல் கூறி நிலைமையை விசாரித்தார்கள். அதற்கு அவர், 'ஹுஸூர்! நான் இமாம் மஹ்தியின் வருகை வரை உயிரோடு இருக்க வேண்டும் என்று துஆ செய்து வந்தேன்' என்று பணிவுடன் கூறினார். அதற்கு ஹுஸூர் அவர்கள், 'பெரியவரே! அப்படியாயின் உங்களுடைய துஆவை இறைவன் ஏற்றுக் கொண்டான்' என்று கூறினார்கள். இதில் அவர் மிகவும் மகிழ்ச்சியடைந்து, தம் பேரன் ஒருவனை ஹஸ்ரத் அவர்களின் சமூகத்தில் முன்நிறுத்தி, 'இவன் மீது தங்களுடைய அருளுக்குரிய கையைப் பதித்து இவனுக்காகத் துஆ செய்யுங்கள்' என்று விண்ணப்பித்தார். ஹுஸூர் அவர்கள் துஆ செய்துவிட்டு மேலே சென்று விட்டார்கள்.

செல்லும்போது - ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் நன்றியுணர்வைப் பற்றிய நிகழ்வை இவர் அடுத்துக் குறிப்பிடுகிறார்; அதுவரை இருந்தவை அனைத்தும் சூழலின் பின்னணியாகும். முகவுரையாகும். நிகழ்வு இதுவாகும் என்று கூறுகிறார்கள் - செல்லும்போது தற்செயலாக, அன்னார் மேலே சென்று கொண்டிருந்தபோது மிகவும் எளிமையாக இருந்த அன்னாரின் காலணி காலிலிருந்து கழன்று கீழே விழுந்தது. காலிலிருந்து கீழே விழுந்து விட்டது. அதனை எளியேன் எடுத்து என் கைகளால் அன்னாரின் காலில் அணிவித்தேன்; அதற்கு ஹுஸூர் அவர்கள் புன்னகைத்த முகத்துடன் அன்பு நிறைந்த சொற்களில் 'ஜஸாகல்லாஹ்' என்று கூறி மிகவும் நன்றி தெரிவித்தார்கள். நன்றி தெரிவிப்பதற்கான எந்தவொரு வாய்ப்பையும் அன்னார் (அலை) தவறவிட மாட்டார்கள். (ரிவாயத்தே அஸ்ஹாபே அஹ்மது, தொகுதி 5, பக்கம் 334)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஹஸ்ரத் முன்ஷீ ருஸ்தம் அலீ ஸாஹிப் (ரலி) அவர்களுக்கு எழுதிய ஒரு கடிதத்தில் குறிப்பிடுகிறார்கள்: 'முன்ஷீ ருஸ்தம் அலீ சாஹிப் ஸல்லமஹு. அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரகாத்துஹு. மியான் இமாமுத்தீன் ஸாஹிப் மூலமாக தாங்கள் அனுப்பிய 50 ரூபாய் தொகை வந்து சேர்ந்தது. நீங்களும் சௌத்ரீ முஹம்மத் பக்ஷி சாஹிபும் எந்த அளவிற்கு முயற்சி செய்தீர்களோ, அதற்கு கருணையுள்ள இறைவன், - அவனது மேன்மை உயர்ந்தது. உங்களுக்கு மகத்தான நற்பலனை வழங்கி இம்மையிலும், மறுமையிலும் வெற்றி பெறச் செய்வானாக! இங்கே கடிதம் எழுதும் வரை, அனைத்து வகையிலும் நலமாக உள்ளது.'

பிறகு, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தம்முடைய நிலவரத்தையும் அவர்களுக்குத் தெரிவித்துள்ளார்கள்.
(மக்தூபாத்தே அஹ்மது, தொகுதி 2, பக்கம் 467 - 468)

ஒவ்வொரு விஷயத்திலும், எவரிடமிருந்தும் சிறிய பொருள் கிடைத்தாலும் கூட அன்னார் (அலை) நன்றி செலுத்துபவராக இருந்தார்கள்.

ஹஸ்ரத் மியான் மீரான் பக்ஷி சாஹிப் ஒரு நிகழ்வை அறிவிக்கிறார்கள்: எளியேன் ஏறத்தாழ 1897 அல்லது 98 ஆம் ஆண்டில் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் மற்றும் மஹ்தி மஸ்வூத் (அலை) அவர்களின் பைஅத்தில் இணைந்தேன்; ஆனால் என் தந்தையாரிடம் சில காலம் வரை இச்செயலை வெளிப்படுத்தவில்லை. இறுதியில் எவ்வளவு காலம் தான் மறைத்து வைக்க முடியும், இரகசியம் வெளியானது. தந்தையார், 'நீ அஹ்மதியாகிவிட்டாய்! இப்போது என் வீட்டை விட்டு வெளியேறிவிடு!' என்று எனக்குத் தீர்க்கமான பதிலளித்து வீட்டிலிருந்து வெளியேற்றி விட்டார்.

எளியேன் உணவளிக்கும் இறைவனையே முற்றிலும் நம்பி, ஒரு தனி கடையை வாடகைக்கு எடுத்துக்கொண்டேன். வறுமை இருக்கவே செய்தது; இருப்பினும், தையல்காரராக இருந்ததால் தன்னால் இயன்ற அளவிற்கு ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களுக்காக ஓர் ஆடையை ஆயத்தம் செய்து, என் கைகளால் தைத்து ஹுஸூர் அவர்களின் சமூகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்ற பேரார்வம் என் உள்ளத்தில் இருந்தது என்று கூறுகிறார்.

அவர் கூறுகிறார்: இந்த எண்ணத்துடன், ஒரு மெல்லிய பருத்தி மேலாடை, ஒரு வெள்ளைத் துணிப் பைஜாமா, ஒரு கருப்பு நிறக் கோட் மற்றும் ஒரு மெல்லிய தலைப்பாகை ஆகியவற்றை வாங்கி என் கைகளால் தைத்து ஆடையை ஆயத்தம் செய்தேன். மேலும் புனித காதியான் செல்வதற்கான வழிச்செலவிற்குக் இங்கும் அங்கும் பணத்தைப் புரட்டி காதியான் சென்று சேர்ந்தேன்.

மறுநாள் வெள்ளிக்கிழமை என்பதால், இயலுமாயின் இந்த எளியவனின் ஏழுமைப் பொருந்திய அன்பளிப்பை இன்றே ஹுஸூர் அவர்களின் சமூகத்தில் சேர்த்தால், ஒருவேளை ஹுஸூர் அவர்கள் ஜுமுஆ தொழுகைக்கு முன்பே அதை அணிந்துகொண்டு இந்த ஏழையின் உள்ளத்தை மகிழ்விக்கக் கூடும் என்ற எண்ணம் இருந்தது. மொத்தத்தில் இந்த யோசனையுடன் காஸீ ஸியாவுத்தீன் சாஹிப் அவர்களின் கடைக்குச் சென்று, அவர்களிடம் என் மனமார்ந்த விருப்பத்தை வெளிப்படுத்தினேன். அதைக் கேட்டதுமே அவர், 'வா இளைஞனே! நான் உன்னை ஹுஸூர் அவர்களின் சமூகத்திற்கு அழைத்துச் செல்கிறேன்' என்று கூறினார். அதன்படியே அவர் உடனடியாக எழுந்து என்னை ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களின் சமூகத்திற்கு அழைத்துச் சென்றார்.

அந்த நேரத்தில் ஹஸ்ரத் (அலை) அவர்கள் ஒரு மரக்கட்டிலில் அமர்ந்து ஏதோ எழுதிக்கொண்டிருந்தார்கள்; காஜா கமாலுத்தீன் சாஹிப் மரக் கட்டிலுக்கு முன்னால் ஒரு பாயில் அமர்ந்திருந்தார். நாங்கள் இருவரும் அங்கு காஜா ஸாஹிப் அருகில் அமர்ந்து கொண்டோம். காஜா ஸாஹிப், 'இந்த நேரத்தில் நீங்கள் எவ்வாறு வந்தீர்கள்?' என்று விசாரித்தபோது, காஸீ சாஹிப் என் விருப்பத்தை வெளிப்படுத்தினார்.

காஜா சாஹிப் சிறிது நேரம் அமைதியாக இருந்துவிட்டு, என் பக்கம் திரும்பி, 'என்ன இளைஞனே! நான் உனக்காக வழக்கறிஞராக பரிந்துரை செய்யட்டுமா?' என்று கேட்டார் - காஜா ஸாஹிப் வழக்கறிஞராக இருந்ததால் இந்தச் சூழலிலும் தம்முடைய தொழில் சார்ந்த சொற்களையே பயன்படுத்தினார். இவர் கூறுகிறார்: அது தங்களுடைய மிகுந்த கருணையாக இருக்கும், பரிந்துரை செய்யுங்கள்' என்று நான் கூறினேன்.

இதனால் காஜா சாஹிப் என்னிடமிருந்து அந்த உடைகளைப் பெற்று ஹுஸூர் (அலை) அவர்களிடம் சமர்ப்பித்தார்; அதோடு, 'ஹுஸூர்! இந்த இளைஞன் ஹுஸூர் அவர்கள் இந்த உடைகளை அணிந்துகொண்டு ஜுமுஆ தொழுகை தொழ வேண்டும் என்று விரும்புகிறார்' என்றும் கேட்டுக் கொண்டார். காஜா ஸாஹிபின் இந்தச் சொற்களைக் கேட்டதும் அருள்நிறைந்த ஹுஸூர் அவர்கள் உடைகளை எடுத்து அணியத் தொடங்கினார்கள். ஆனால் கோட் அணிந்தபோது அது மிகவும் இறுக்கமாக இருந்தது. 'ஹுஸூர்! கோட் மிகவும் இறுக்கமாக உள்ளது, அதை கழற்றிக் கொடுத்தால் நான் அதைச் சிறிது தளர்த்தித் தருகிறேன்' என்று கேட்டுக் கொண்டேன்.

எவ்வாறாயினும், அந்த நேரத்தில் அங்கு அணிந்திருக்க மாட்டார்கள். அப்பொழுதே ஹுஸூர் அவர்கள் அணிந்து வந்திருப்பார்கள். தம்முடைய வேலையை விட்டுவிட்டு அந்த உடைகளை அணிந்துகொண்டு வந்தார்கள். அவர் கூறுகிறார்: கோட் அணிந்தபோது இறுக்கமாக இருந்ததால், ஹுஸூர் அவர்கள் கோட்டைக் கழற்றி என்னிடம் கொடுத்தார்கள். 'நான் இதைச் சரிசெய்து தருகிறேன், இது சற்று இறுக்கமாக இருக்கிறது' என்று கூறினேன். அவர் கூறுகிறார்: இதனால் உடனே நான் விரைவாக எழுந்து கடைத்தெருவிற்கு எடுத்துச் சென்று, ஒரு தையல் கடையில் அமர்ந்து கோட்டின் பின்புறத்



தையல் முழுவதையும் பிரித்துத் தளர்த்தினேன்; பின்னர் மீண்டும் ஹுஸ்ஸீர் அவர்களின் சமூகத்தில் ஆஜரானேன்.

பின்னர் ஹுஸ்ஸீர் அவர்கள் அதனை அணிந்தார்கள்; இருப்பினும் கோட்டின் பொத்தான்கள் ஹுஸ்ஸீர் அவர்களின் விருப்பத்திற்கு ஏற்பத் தானாகப் பொருந்தவில்லை, மூடப்படாமல் இருந்தன. ஆனால் எவ்வாறாயினும், ஹுஸ்ஸீர் அவர்கள் என் மனதை மகிழ்விப்பதற்காகப் பொத்தான்களை இழுத்துப் பூட்டிக்கொண்டார்கள்; இந்த உடைகள் அணிவதற்கு ஏற்றவையா? இல்லையா என்பதைப் பற்றி சிறிதும் யோசிக்கவில்லை. (ரிவாயாத்தே அஸ்ஹாபே அஹ்மது, தொகுதி 1, பக்கம் 368 - 369)

புதியதாக அஹ்மதியாகி அன்பளிப்பைக் கொண்டுவந்திருந்த அந்த இளைஞனின் உணர்வுகளுக்கு அந்த நிலையிலும் மதிப்பளித்து அணிந்து கொண்டார்கள்; மேலும் அதற்கு மிகவும் நன்றியும் செலுத்தினார்கள்.

ஹஸ்ரத் மியான் ஸைஃபுல்லாஹ் சாஹிப் அறிவிக்கிறார்கள்: நான் ஒருமுறை காதியான் சென்றிருந்தேன்; ஒரு நபர் ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களுக்கு முன்னால் ஐம்பது அறுபது ரூபாய்களைக் குவித்து வைத்தார். ஆனால் ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் அந்தப் பக்கம் கவனமே செலுத்தவில்லை. பொதுவாக மக்கள் கொடுக்கும்போது நன்றி செலுத்தி வந்தார்கள். இருப்பினும் இதில் ஏதேனும் குறிப்பான காரணம் இருந்திருக்கக்கூடும். எவ்வாறாயினும், அவர் ரொக்கத் தொகையைக் கொடுத்தார்; ஹுஸ்ஸீர் அவர்கள் எவ்விதக் கவனமும் செலுத்தவில்லை என்று கூறுகிறார்.

அதற்குள் ஒரு மூதாட்டி - அநேகமாக, இந்துப் பெண்ணாக இருக்கலாம் - அவருடன் ஒரு சிறுவனும் இருந்தான். அவனிடம் துணியில் வெல்லக்கட்டி ஒன்று முடிந்து வைக்கப்பட்டிருந்தது. 'ஹுஸ்ஸீர்! இந்தச் சிறுவன் உங்களுக்காக இந்த வெல்லக்கட்டியைக் கொண்டுவந்துள்ளான்; ஹுஸ்ஸீர் இவனுக்காக துஆ செய்ய வேண்டும்' என்று அந்தப் பெண் விண்ணப்பித்தாள்.

ஹுஸ்ஸீர் அவர்கள், 'மிகவும் நல்லது' என்று கூறி மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள்; அந்தச் சிறுவனின் கையிலிருந்து துணியுடன் கூடிய அந்த வெல்லக்கட்டியைப் பெற்றுத் தம்முடைய தோளில் போட்டுக் கொண்டார்கள். (ரிவாயாத்தே அஸ்ஹாபே அஹ்மது, தொகுதி 4, பக்கம் 453)

இப்போது அந்த ஏழைச் சிறுவனிடமிருந்து அந்த எளிய அன்பளிப்பையும் பெற்றுக்கொண்டு, அதற்குப் பெருமதிப்பளித்து நன்றியும் செலுத்தினார்கள்; மேலும் அவனுக்காக துஆவும் செய்தார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் அஹ்மதி சமுதாயத்தின் பெயரில் எழுதிய ஒரு கடிதத்தில் கூறுகிறார்கள்: 'எல்லாவற்றிற்கும் மேலாக, என் உள்ளத்தில் அல்லாஹ்வின் நன்றியுணர்வே கொந்தளித்து மேலெழுகிறது; அவன் என் ஜமாஅத்திற்கு உண்மையான உறுதியையும், அன்பையும் அனுதாபத்தையும் வழங்கியுள்ளான்.

அல்லாஹ்வின் அருள் அவர்களோடு இல்லாதிருந்தால், தங்களின் நிதி நெருக்கடிகளுக்கும் வருமானக் குறைவிற்கும் இடையிலும், ஸஹாபா (ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) உடைய அடிச்சுவட்டில் இந்த அளவிற்குக் கீழ்ப்படிந்து, தம் ஆற்றலுக்கும் மீறி நிதித் தொண்டில் ஈடுபடும் இந்தத் தவ்ஃபீக் அவர்களுக்கு ஒருபோதும் வழங்கப்பட்டிருக்காது. அவர்கள் அனைவரின் செல்வங்களிலும் இறைவன் பரக்கத் செய்வானாக! என்றும், மார்க்க நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அவர்கள் செய்து வரும் இந்த உதவியையும் ஒத்துழைப்பையும் இறைவன் இரு உலகங்களிலும் அவர்களின் நன்மைக்குக் காரணமாக ஆக்குவானாக! என்றும் நான் துஆ செய்கிறேன்.' (மக்தூபாத்தே அஹ்மது, தொகுதி 5, பக்கம் 365)

அடுத்து, அறிவுரை வழங்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: 'அல்லாஹ் எவர் மீது அருள் புரிந்துள்ளானோ, அதற்கு நன்றி செலுத்துவது என்பது அவனுடைய படைப்புகளுக்கு நன்மையும், நன்னடத்தையும் புரிவதாகும்; மேலும் இறைவன் தந்த இந்த அருளின் மீது ஆணவம் கொள்ளாமலும், காட்டுமிரண்டிகளைப் போல ஏழைகளை நசுக்காமலும் இருப்பதாகும்' (மல்ஃபூஸாத், தொகுதி 7, பக்கம் 314, 2023-ம் ஆண்டு பதிப்பு)

அதாவது ஏழைகளுக்கு உதவுவதன் பக்கமும் அன்னார் (அலை) கவனமூட்டியுள்ளார்கள்.

அல்லாஹ்விடமிருந்து அறிவு பெற்று, அன்னார் (அலை) மக்களின் விவகாரங்களைப் பற்றியும் சில வேளைகளில் முன்னரே அறிவித்து விடுவார்கள்; அல்லது எதிரிகளைப் பற்றி அல்லாஹ்விடமிருந்து அறிவு பெற்று, இவருக்கு இன்னின்னவாறு நடக்கும் என்று தெரிவித்து விடுவார்கள். ஆனால் சில வேளைகளில் அல்லாஹ்வின் ஞானத்திற்குட்பட்டு அவை நிறைவேறுவதில் தாமதமாகும். இத்தகைய சூழல்களில் எதிரிகள் இதனை வைத்து ஆரவாரம் செய்வார்களே என்று அன்னார் (அலை) நிம்மதியிழந்து துஆக்களில் ஈடுபட்டு விடுவார்கள். ஆனால் அந்த விஷயம் நிறைவேறும் போது, மிகுந்த நன்றியுணர்வுடன் அன்னார் (அலை) அல்லாஹ்வுக்கு முன் ஸஜ்தாவில் விழுந்துவிடுவார்கள்.

அதன்படி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: 'ஒருமுறை ஷரம்பத் கத்ரியின் சகோதரரான பிஷம்பர் தாஸ் என்பவர் மீது தொடரப்பட்ட குற்றவியல் வழக்கிலிருந்து அவர் (குற்றமற்றவர் என) முழுமையாக விடுவிக்கப்பட மாட்டார். ஆனால் சிறைத்தண்டனையில் பாதி தண்டனை மட்டுமே எஞ்சியிருக்கும் என்று நான் முன்னறிவிப்பு செய்திருந்தேன். இதன் பின்னர், முன்னறிவிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தவாறே பிஷம்பர்தாஸ் பாதி சிறைத்தண்டனையை அனுபவித்து விடுதலையானபோது, எதிர்பாராதவிதமாக அவருடைய வாரிசுகள் 'பிஷம்பர் தாஸ் (வழக்கிலிருந்து முழுமையாக) விடுவிக்கப்பட்டார் என்று பரப்பிவிட்டார்கள்.

இரவு நேரமாக இருந்தது; நான் என்னுடைய பெரிய பள்ளிவாசலில் தொழுகை நிறைவேற்றுவதற்காகச் சென்றிருந்தேன். அப்போது காதியான்வாசியான அலீ முஹம்மத் என்ற முல்லா பள்ளிவாசலுக்கு வந்து, 'பிஷம்பர் தாஸ் (குற்றமற்றவர் என) விடுவிக்கப்பட்டார், சந்தையில் அவருக்கு வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன' என்று கூறினார். இந்தச் செய்தியைக் கேட்டதுமே எனக்கு மிகுந்த வேதனையும் உள்ளத்தில் அமைதியின்மையும் ஏற்பட்டது. 'பிஷம்பர் தாஸ் (குற்றமற்றவர் என) விடுவிக்கப்பட மாட்டார் என்று அறிவித்திருந்தாயே, இப்போது நீயே பார்! அவர் (வழக்கிலிருந்து) முழுமையாக விடுவிக்கப்பட்டுள்ளார்' என்று காழ்ப்புணர்ச்சி கொண்ட இந்துக்கள் தாக்குதல் நடத்துவார்களே! என்று அஞ்சினேன்.

இந்தத் துயரத்தினால் தொழுகையின் ஒவ்வொரு ரக்அத்தும் எனக்கு ஒரு வருடத்திற்குச் சமமாக மாறியது. தொழுகையில் ஒரு ரக்அத்திற்குப் பிறகு நான் ஸஜ்தாவிற்குச் சென்றபோது, என்னுடைய பதற்றம் உச்சக்கட்டத்தை அடைந்தது...' அப்பொழுது ஸஜ்தாவின் நிலையிலேயே உரத்த குரலில் இறைவன் என்னிடம் இவ்வாறு கூறினான். அதாவது, அச்சமடையாதீர்! நீர்தான் மேலோங்கியிருக்கிறீர்!

பிறகு, முன்னறிவிப்பு எப்படி நிறைவேறும் என்று நான் காத்துக் கொண்டிருந்தேன். ஆனால், எந்த அடையாளமும் வெளிப்படவில்லை. பிஷம்பர்தாஸ் (வழக்கிலிருந்து) விடுவிக்கப்பட்டு விட்டார் என்பது உண்மையா? என்று அந்த ஷரம்பத்திடமே மீண்டும் மீண்டும் கேட்டுக் கொண்டிருந்தேன். அப்பொழுது அவர், அவர் உண்மையில் (வழக்கிலிருந்து) விடுவிக்கப்பட்டு விட்டார். நான் பொய் சொல்ல வேண்டிய அவசியம் என்ன இருந்தது? என்றே கூறிக் கொண்டிருந்தார். அந்த இந்து இவ்வாறு கூறிக் கொண்டிருந்தார். அந்தக் கிராமத்தில் நான் யாரிடம் விசாரித்தாலும், 'அவர் (வழக்கிலிருந்து) முழுமையாக விடுவிக்கப்பட்டுவிட்டார் என்று நாங்களும் கேள்விப்பட்டோம்' என்றே கூறினர். இவ்வாறாக ஏறக்குறைய ஆறு மாதங்கள் கழிந்தன. அல்லது சற்று கூட குறைய ஆகியிருந்தன. தீய எண்ணம் கொண்ட மக்கள், தங்களின் பழைய வழக்கப்படி ஏளனமும் பரிகாசமும் செய்து கொண்டிருந்தனர். ஆனால், ஷரம்பத் எந்த ஏளனமும் பரிகாசமும் செய்யவில்லை. இதனால், இந்த முறை அவர் என்னிடம் கண்ணியமாக நடந்து கொண்டார் என்று நான் நம்பினேன்.

இருப்பினும், அவருடைய சகோதரர் (வழக்கிலிருந்து குற்றமற்றவராக) விடுவிக்கப்பட மாட்டார் என்ற செய்தியை நான் அவ்வளவு உறுதியாக அவரிடம் கூறியிருந்தேனே! இப்போது இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதே என அவர் முன் நான் வெட்கமடைந்தேன். ஆயினும், என் இறைவன் மீது எனக்குத் திடமான நம்பிக்கை இருந்தது. இறைவன் தன் வல்லமையின் ஏதேனும் ஒரு காட்சியைக் காட்டுவான் என்றும், (வழக்கிலிருந்து குற்றமற்றவராக) விடுவிக்கப்பட்ட பிறகு மீண்டும் அவர் பிடிக்கப்படுவதற்கான சாத்தியமுள்ளது என்றும் நான் உறுதியாக நம்பினேன். ஆனால், (வழக்கிலிருந்து) விடுதலை எனும் இந்தச் செய்தியே ஒரு புனையப்பட்ட பொய் என்பதும், பரப்பப்பட்ட தவறான வதந்தி என்பதும் எனக்குத் தெரிந்திருக்கவில்லை.

இதற்குப் பிறகு, காலை சுமார் எட்டு மணி அளவில் பட்டாலாவின் தஹ்சீல்தார் (வட்டாட்சியர்) ஹாஃபிஸ் ஹிதாயத் அலீ என்பவர், பணி ஆய்விற்காகக் காதியான் வந்தார். ஏனெனில், காதியான் பட்டாலா வட்டாட்சியர் எல்லைக்கு உட்பட்டதாகும். அவர் எங்கள் இல்லத்திற்கு வந்தார். அவர் குதிரையிலிருந்து இறங்குவதற்கு முன்பே, சில இந்துக்கள் தங்களின் வழக்கப்படி அவருக்கு ஸலாம் கூற வந்து விட்டனர்.அவர்களில் பிஷம்பர் தாஸும் இருந்தார். அப்போது வட்டாட்சியர் பிஷம்பர் தாஸைப் பார்த்து, 'பிஷம்பர் தாஸ்! நீங்கள் சிறையிலிருந்து விடுதலை பெற்றதைக் கண்டு நாம் மகிழ்ச்சியடைந்தோம், ஆனால் நீங்கள் (வழக்கிலிருந்து) முழுமையாக விடுவிக்கப்படவில்லை என்பது வருத்தமளிக்கிறது' என்று கூறினார்.

இந்த விஷயத்தைக் கேட்டவுடனேயே நான் இறைவனுக்கு நன்றி ஸஜ்தா செய்தேன். உடனே ஷரம்பத்தை அழைத்து, 'பிஷம்பர் தாஸ் (வழக்கிலிருந்து) முழுமையாக விடுவிக்கப்பட்டுவிட்டார் என்று இத்தனை காலம் என்னிடம் ஏன் பொய் சொல்லி, என்னை வீணாக வேதனைப்படுத்தினாய்?' என்று கேட்டேன். அதற்கு, ஒரு சங்கடமான சூழலின் காரணமாக இந்த பொய் சொல்ல வேண்டியதாயிற்று; அதாவது எங்களுடைய சமுதாயத்தில் திருமண உறவுகளின் போது சிறிய சிறிய விஷயங்களில் கூட குறைகாண்பார்கள்; ஏதேனும் தீயநடத்தை நிரூபணமானால் பெண் கிடைப்பது சிரமமாகி விடும். எனவே இந்தச் சங்கடத்தினாலேயே உண்மைக்கு மாறாகச் சொல்லி வந்தேன்; உண்மைக்கு மாறான செய்தியைப் பரப்பினேன்; பொய் கூறிக் கொண்டிருந்தேன் என்று அவர் பதிலளித்தார். (ஹக்கீக்கத்துல் வஹீ, ரூஹானீ கஸாயீன்,

தொகுதி 22, பக்கம் 314 - 315) (பராஹீனே அஹ்மதிய்யா, பாகம் 4, பக்கம் 657, அடிக்குறிப்பு எண்: 4)

(குறிப்பு: ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தமது நூல்களில், உதாரணமாக பராஹீனே அஹ்மதிய்யா, தர்யாகுல் குலூப், நுஸ்ஃலுல் மஸீஹ் போன்றவற்றில் பஷம்பர்தாஸ் என்ற இந்த பெயரை எழுதியுள்ளார்கள். ஹக்கீக்கத்துல் வஹீ என்ற நூலில் மட்டும் பஸம்பர்தாஸ் அதாவது ஸீன் என்ற எழுத்துடன் எழுதியுள்ளார்கள்.)

ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் தமது ஓர் அடையாளத்தைக் குறிப்பிட்டவாறு கூறுகின்றார்கள்:

'பண்டிட் தயானந்தரைப் பின்பற்றுபவர்கள் சம்மந்தமாக ஒரு முன்னறிவிப்பு நிறைவேறியது; அதன் விவரத்தை அறிந்துகொள்வது வாசகர்களுக்குப் பயனளிக்காமல் இருக்காது. எனவே அதனை எழுதுவதால் சிறிது நீண்டு சென்றாலும், இஸ்லாத்தின் மகத்துவத்தைப் அறியாத அந்த மக்களின் நன்மையைக் கருதி எழுதப்படுகிறது. இந்த முன்னறிவிப்பு நிறைவேறுவதற்கு முன்பாக ஒரு விசித்திரமான சிக்கல்களும், சங்கடங்களும் இதற்கு உருவாயின -அதாவது இங்கும் அன்னாரின் முன்னறிவிப்புகள் இஸ்லாத்தின் மகத்துவம் வெளிப்பட வேண்டும், அண்ணல் நபி (ஸல்) அவர்களின் கொடி உலகில் பறக்க வேண்டும் என்பதற்காகவே அமைந்திருந்தன - ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: 'இறுதியில் இறைவன் அந்தச் சிக்கல்கள் அனைத்தையும் நீக்கி, 1883-ஆம் ஆண்டு செப்டம்பர் 10-ஆம் தேதி திங்கள்கிழமை அன்று இந்த முன்னறிவிப்பை நிறைவேற்றினான்.'

அதன் விவரத்தைக் குறிப்பிடுகிறார்கள்: '1883-ஆம் ஆண்டு செப்டம்பர் 6-ஆம் தேதி வியாழக்கிழமை அன்று, கருணையுள்ள இறைவன் மிக அவசியமான நேரத்தில் இந்த எளியவனின் ஆறுதலுக்காகத் தன்னுடைய அருளுக்குரிய உரையாடலால், அதாவது, 21 ரூபாய் வரவிருக்கிறது' என்று (பாரசீக மொழியில்) நற்செய்தி அளித்தான். அந்த நற்செய்தியில் இருந்த ஒரு விசித்திரமான விஷயம் என்னவென்றால், வரவிருக்கும் ரூபாயின் குறிப்பிட்ட எண்ணிக்கையைக் கொண்டு அறிவிக்கப்பட்டது; இவ்வாறு குறிப்பிட்ட எண்ணிக்கையை அறிவிப்பது மறைவானவற்றை அறிபவனின் சிறப்புப் பண்பாகும். வேறு எவரின் வேலையுமன்று. இவ்வளவு தொகை வரும் என்று குறிப்பிட்ட தொகை பற்றி தகவல் அறிவிக்கப்படுவது சாதாரண விஷயமன்று; மேலும் மற்றொரு விசித்திரமான விஷயம் என்னவென்றால், இந்த எண்ணிக்கை எதிர்பாராத வழியில் அமைந்திருந்தது - அதாவது முன்னதாக எவ்வித எண்ணமும் இருக்கவில்லை.'

ஏனெனில், நிர்ணயிக்கப்பட்ட நூலுடன் இந்த எண்ணிக்கைக்கு எவ்விதத் தொடர்பும் இருக்கவில்லை. ஆகவே, இந்த விசித்திரமான அம்சங்களின் காரணமாகவே, இது நிகழ்வதற்கு முன்பாகவே சில ஆரியர்களுக்கு இந்த இல்ஹாம் தெரிவிக்கப்பட்டது. பின்னர் 1883-ஆம் ஆண்டு செப்டம்பர் 10-ஆம் தேதி, '21 ரூபாய் வந்துள்ளது' என்று அழுத்தமாக மூன்றாவது முறை இல்ஹாம் இறங்கியது. இந்த இல்ஹாமிலிருந்து இன்று இந்த முன்னறிவிப்பு நிறைவேறிவிடும் என்று புரிந்து கொள்ளப்பட்டது. அதன்படி, இல்ஹாம் இறங்கி மூன்று நிமிடங்களுக்கு மேல் ஆகியிருக்காது, வசீர் சிங் என்ற நோயாளி ஒருவர் வந்தார்; அவர் வந்தவுடனேயே ஒரு ரூபாயை அன்பளிப்பாக வழங்கினார். 'மருத்துவம் செய்வது இந்த எளியவனின் தொழிலாக இல்லாதபோதிலும், தற்செயலாக யாரேனும் நோயாளி வந்து விட்டால், மருந்து நினைவிலிருந்தால் நன்மையை மட்டுமே கருதி அல்லாஹ்வுக்காக அல்லாஹ்வின் பெயரால் இலவசமாகவே வழங்கப்படும், நான் தொகையாக எப்பொழுதும் எதையும் பெற்றதில்லை'. அன்னார் கூறுகிறார்கள்: ஆனால், பணம் அவரிடமிருந்து 1 ரூபாய் பெற்றுக் கொள்ளப்பட்டது. ஏனெனில், '21 ரூபாய் வருவது பற்றி இருந்த அந்த முன்னறிவிப்பின் ஒரு பகுதி இது' எனும் எண்ணம் உடனடியாக வந்தது.

இதன் பிறகு, அஞ்சலகம் மூலமாக மற்ற பகுதி நிறைவேறுமோ என்ற எண்ணத்தில், நம்பிக்கையான ஒருவரை அஞ்சலகத்திற்கு அனுப்பிவைத்தேன். அஞ்சலகத்திலிருந்து, இந்துவாகிய அஞ்சலக எழுத்தர், 'என்னிடம் டேரா காஸீ கானிலிருந்து வந்த கார்டு இணைக்கப்பட்ட 5 ரூபாய் மணியார்டர் மட்டுமே உள்ளது; இப்போது என்னிடம் பணம் இல்லை, வந்தவுடன் தருகிறேன்' என்று பதிலளித்தார். இந்தச் செய்தியைக் கேட்டதும் கடுமையான ஆச்சரியமும், விவரிக்க முடியாத பதற்றமும் ஏற்பட்டது. ஏனெனில், இஸ்லாத்தின் உண்மையைப் பறைசாற்றுவதற்காக முஸ்லிம் அல்லாதவர்களுக்கு முன்னால் அன்னார் இந்த முன்னறிவிப்பை எடுத்துக் கூறுகிறார்கள்.

அன்னார் (அலை) கூறினார்கள்: 'எனக்கு மிகுந்த பதற்றம் ஏற்பட்டது; அதனால் இந்த எளியவன் சிந்தனையில் மூழ்கி, தலையை முழங்காலில் பதித்தவாறு இருந்தேன். 'ஐந்தும் ஒன்றும் சேர்ந்தால் ஆறாகிறதே, இனி இருபத்தொன்று எவ்வாறு ஆகும்? இறைவா! இது என்ன ஆயிற்று?' எனும் எண்ணத்திலேயே ஆழ்ந்திருந்தேன். இவ்வாறு ஆழ்ந்த சிந்தனையில் இருந்தபோது, திடீரென்று 'இருபத்தொன்று வந்துள்ளது, இதில் சந்தேகமில்லை' என்று இல்ஹாம் வந்தது. இந்த இல்ஹாம் வந்து இரண்டு பொழுதுகள் கழிந்திருக்காது; அஞ்சலக எழுத்தரின் முந்தைய கூற்றைக் கேட்டிருந்த ஓர் ஆரியர் அன்றைய தினமே அஞ்சலகத்திற்குச் சென்றார். அஞ்சலக எழுத்தர் ஏதோ சங்கடத்தினால், 'உண்மையில் இருபது ரூபாய் வந்திருக்கிறது; முன்பு தவறுதலாக என் வாயிலிருந்து ஐந்து ரூபாய் என்று வந்துவிட்டது' எனும் செய்தியை அவரிடம் தெரிவித்தார்.

அதன்படி, அந்த ஆரியரே கணக்காளர் முன்ஷீ இலாஹீ பக்ஷ் ஸாஹிப் அவர்களிடமிருந்து வந்த ஒரு கார்டுடன் அந்த இருபது ரூபாயையும் எடுத்து வந்தார். அந்த கார்டும் மணியார்டர் படிவத்துடன் இணைக்கப்படாமல் தனியாக இருந்ததும், பணம் ஏற்கனவே வந்து சேர்ந்திருந்ததும் தெரியவந்தது. மேலும், அஞ்சலகத்துக்கு அனுப்பிய முன்ஷீ இலாஹீ பக்ஷ் ஸாஹிப் அவர்களின் எழுத்து மடலிலிருந்து, 1883-ஆம் ஆண்டு செப்டம்பர் 6-ஆம் தேதி - அதாவது (முதல்) இல்ஹாம் வந்த அதே நாளில் - இந்த மணியார்டர் காதியான் வந்து சேர்ந்துவிட்டது என்பதும் புலனானது. ஆகவே, அஞ்சலக எழுத்தரின் கூற்று முழுதும் தவறாக முடிந்தது; மறைவானவற்றை அறிந்த இறைவனின் செய்தி முற்றிலும் உண்மையானது என்று நிரூபணமானது. எனவே, இந்த அருள் நிறைந்த நாளின் நினைவாக ஒரு ரூபாய்க்கு இனிப்பு வாங்கி (அங்கிருந்த) சில ஆரியர்களுக்கும் வழங்கப்பட்டது.'

அல்லாஹ் தமக்கு இவ்வாறு கூறியுள்ளான் என்பதை ஆரியர்களுக்கு முன்னரே தெரிவித்திருந்ததால், அந்த மகிழ்ச்சியில் அவர்களுக்கு இனிப்பும் வழங்கினார்கள். ஃபல்ஹம்துலில்லாஹி அலா ஆலாஇஹீ வ நிஃமாஇஹீ வ ஸாஹிரிஹா வ பாதினிஹா - அல்லாஹ்வின் வெளிப்படையான மற்றும் மறைமுகமான அருட்கொடைகளுக்காக, அனைத்து வகையான புகழும் புகழ்ச்சியும் அல்லாஹ்வுக்கே உரியது.

(பராஹீனே அஹ்மதிய்யா, பாகம் 4, ரூஹானீ கஸாயீன் தொகுதி 1, பக்கம் 623 - 626 அடிக்குறிப்பு எண்: 3)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: 'என்னுடைய அடையாளங்கள் வெளிப்படாத எந்தவொரு சமுதாயமும் இல்லை; என்னுடைய அடையாளங்களுக்குச் சான்றாக இல்லாத எந்தவொரு பிரிவினரும் இல்லை. இந்த அடையாளங்களின் சான்றாளர்கள் பத்து கோடி பேர் என்று கூறினாலும் அது மிகையாகாது. ஆனால் எதிரிகளின் நிலையைக் கண்டு அழுகையே வருகிறது; ஏனெனில் அவர்கள் எவ்விதப் பயனையும் அடையவில்லை.

இவர்களுக்குக் காட்டப்பட்ட இந்த அடையாளங்கள் ஹஸ்ரத் ஈஸப்னு மர்யம் அவர்களின் காலத்தில் யூதர்களுக்குக் காட்டப்பட்டிருந்தால், அவர்கள் அதாவது 'அவர்கள் மீது இழிவும் வறுமையும் விதிக்கப்பட்டன' என்று திருக்குர்ஆனில் வந்திருக்கிறதே, அதற்குரிய இலக்காக ஆகியிருக்க மாட்டார்கள். மேலும் லூத் நபியின் சமுதாயத்தினர் இந்த அடையாளங்களைக் கண்டிருந்தால், பேரதிர்ச்சியூட்டும் நிலநடுக்கத்தினால் பூமிக்கு அடியில் புதைக்கப்பட்டிருக்க மாட்டார்கள்.

ஆனால், அந்த உள்ளங்களைக் குறித்து வருத்தமே ஏற்படுகிறது; ஏனெனில், அவை கல்லை விடவும் கடினமானவை என்று நிரூபணமாகியது. ஒவ்வொரு இருளையும் விட அவர்களின் உள்ளத்தின் இருள் அதிகரித்துவிட்டது. உண்மையான விஷயம் என்னவென்றால், காலம் ஒவ்வொரு உலகியல் பொருளிலும் வளர்ச்சி அடைந்திருப்பதைப் போலவே, நிராகரிப்பிலும் நம்பிக்கையின்மையிலும் வளர்ச்சி அடைந்துள்ளது. ஆகவே, இந்த வளர்ச்சி பெற்ற நிராகரிப்பு, அவர்கள் மீது எவ்வித சாதாரண இறைதண்டனையும் இறங்கக் கூடாது என்றும், மாறாக உலகின் தொடக்கத்திலிருந்து இன்று வரை ஒருபோதும் இறங்காத இறை தண்டனையே இறங்க வேண்டும் என்றும் விரும்புகிறது.

எவ்வாறாயினும், எதிரிகள் எந்த ஒளியை ஏற்றுக் கொள்ளவில்லையோ மேலும் குருடர்களாக இருந்தார்களோ, அதே ஒளி நம்முடைய பார்வையையும் இறைஞானத்தையும் அதிகரிப்பதற்குக் காரணமாக அமைந்ததற்காக நாம் இறைவனுக்கு ஆயிரம் ஆயிரம் நன்றிகளைச் செலுத்துகிறோம்.' (ஹக்கீக்கத்துல் வஹீ,ரூஹானீ கஸாயீன் தொகுதி 22, பக்கம் 312)

இதை அன்னார் 'ஹக்கீக்கத்துல் வஹீ' எனும் நூலில் எழுதியுள்ளார்கள்.

அல்லாஹ் நமக்கு எங்கு நன்றியுணர்வின் உண்மையான புரிதலை வழங்குவானோ அங்கு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மை ஊழியரின் பைஅத்தில் இணைந்து மெய்யான ஒளியையும், பார்வையையும் இறை ஞானத்தையும் தந்தருள்வானாக! (அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல், செப்டம்பர் 18, 2026, பக்கம் 2 - 6)

தமிழாக்கம்
முரப்பி
அத்தாவுல் முஃக்னீ

* * * * * * * * * * * * *

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்
தொலைபேசி எண் : 1800 103 2131
இந்த TOLL FREE எண்ணில்
∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்
தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.
தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30
மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

2-ம் பக்கத் தொடர்ச்சி (தலையங்கம்) .....

அல்லாஹ்வின் அருளும், கருணையும் வேண்டும். அல்லாஹ்வின் புறமிருந்து நற்பேறு கிடைத்தால் தான் இது நிகழும். எனவே அல்லாஹ் உங்களுக்கு தாகத்தை தணித்து தண்ணீர் அருந்துவதற்கு நற்பேறு வழங்குவதற்காக நீங்கள் அல்லாஹ்விடம் நற்பேறு வேண்டுங்கள். தண்ணீர் அருந்தி தாகத்தை தணித்துக் கொள்ளுங்கள். உங்கள் அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள். உங்கள் ஆன்மிகத்தை அதிகரித்துக் கொள்ளுங்கள்.

இன்றைய காலத்தின் சமூக ஊடகங்கள் (Social Media) உள்ளன ; ஏராளமான அச்சு ஊடகங்கள் உள்ளன. மார்க்கத்திலிருந்து விலக்குவதற்கும், ஷைத்தானின் பக்கம் அழைத்துச் செல்வதற்கும் இன்னும் ஏராளமான எத்தகைய விஷயங்கள் இருக்கின்றன என்றால், அவற்றை குறித்து முன்பு கற்பனை கூட செய்யப்படவில்லை. இத்தகைய சூழ்நிலைகளில், நாம் முன்பை விட அதிகமாக அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களை தர்பியத்திற்காக அனுப்பியுள்ளான். எனவே, நாம் அன்னாரின் போதனைகளைக் கேட்க வேண்டும்; மேலும், படிக்க வேண்டும்.

ஹுஸ்ஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: 'உங்களின் அசல் நோக்கம் ஏகத்துவத்தை நிலைநாட்டுவதாக இருக்க வேண்டும். மேலும் அதனை நிலைநாட்டுவதற்கு நீங்கள் முழு முயற்சி செய்ய வேண்டும். மேலும் உங்கள் உள்ளங்களில் அல்லாஹ்வின் மீது நேசம் உருவாக வேண்டும்; மேலும், அதனை நாவினால் மட்டும் ஏற்றுக் கொள்ளாமல், செயல் வடிவிலும் அதனை உண்மைப்படுத்த வேண்டும். மேலும், அதற்கு எப்போதும் அல்லாஹ்வின் வாசலில் விழுந்து கிடப்பது அவசியமாகும். உங்களது இறை வணக்கங்களின் தரத்தை உயர்த்துங்கள். இறை வணக்கங்களின் தரத்தை உயர்த்துதல் என்பதன் பொருள் எல்லா உலகியல் உறவுகளை விடவும் அல்லாஹ்வின் மீதான அன்பு நேசத்திற்குரியதாக இருக்க வேண்டும். மேலும் அவனது திருப்தியை பெறுவது எல்லாவற்றையும் விட முதன்மையானதாக இருக்க வேண்டும். உதாரணமாக அல்லாஹ் கூறுகிறான்:

فَاذْكُرُوا اللّٰهَ كَذِكْرِكُمْ اٰبَآءَكُمْ

(உங்கள் முன்னோர்களை நினைவுகூர்வது போல அல்லது அதைவிட அதிகமாக அல்லாஹ்வை நினைவுகூருங்கள்)

ஹுஸ்ஸூர் அன்வர் அவர்கள் மேலும் கூறினார்கள்: 'நீங்கள் இந்த நிலையை உருவாக்கிவிடுவீர்கள் என்றால், பின்னர் அல்லாஹ் உங்களுக்கு வழிகாட்டவும் செய்வான்; சிரமங்களிலிருந்து விடுதலையும் அளிப்பான். உங்களின் துஆக்களையும் கேட்பான். உங்களது குடும்பப் பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பான். மேலும், உங்களின் பிள்ளைகளின் தர்பியத்தில் உங்களுக்கு ஏற்படும் கவலைகளையும் அகற்றி விடுவான்.'

ஹுஸ்ஸூர் அவர்கள் கூறினார்கள்: 'அல்லாஹ் தஆலாவைத் திருப்திப்படுத்த உங்களுக்கு செயல் ரீதியிலான நடவடிக்கைகளை எடுக்க நேரிடும். மேலும், கடந்த காலத்தில் ஏதேனும் தவறுகள் நிகழ்ந்திருந்தால், பின்னர் அவற்றிலிருந்து உண்மையான தவ்பா செய்ய நேரிடும். மேலும் நன்றியுணர்வுடன் இறைவனை திருப்திப்படுத்த நேரிடும். இவை நிகழும்போதுதான் நீங்கள் பைஅத்தின் உரிமைகளை நிறைவேற்றக் கூடியவர்களாக இருப்பீர்கள். மேலும், அப்போதுதான் நீங்கள் செய்த பைஅத் உடன்படிக்கையை நிறைவேற்றி அல்லாஹ்வின் அருட்கொடைக்கு தகுதி படைத்தவர்களாக இருப்பீர்கள். உங்கள் தரப்பிலிருந்து முழுமையான முறையில் அல்லாஹ்வின் கட்டளைகளை முழுமையாகப் பின்பற்றப்படும் போதுதான் அவனது அருட்கொடைகள் கிடைக்கும்.'

ஹுஸ்ஸூர் அவர்கள் கூறினார்கள்: 'ஒரு மனிதன் இறையச்சமுடையவனாக இருப்பது அவனுக்கு மிக அவசியமாகும். ஏனெனில் இறையச்சமுடையவர்களே அல்லாஹ்வின் பார்வையில் கண்ணியத்திற்கும், மரியாதைக்கும் உரியவர் ஆவர்.'

ஹுஸ்ஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்:

'நமது ஜமாஅத் எப்போதும் இந்த அறிவுரையை நினைவில் கொள்ள வேண்டும். இதில் ஆண்களும் அடங்குவர்; மேலும் இதில் பெண்களும் அடங்குவர். இந்த அறிவுரை ஆண்களுக்கு மட்டுமே உரியது; அவர்கள் இந்த விவகாரத்தை கருத்தில் கொள்ள வேண்டும் என்று எழுதப்படவில்லை. அன்னார் (அலை) கூறினார்கள்:

நீங்கள் இந்த அமைப்பில் இணைந்துள்ளீர்கள் என்றால் பின்னர் ஒரு புதிய வாழ்க்கையைத் தொடங்கும் மனிதராக மாறிவிட வேண்டும்.'

' இதற்கு பிறகும் நம்முடைய நடைமுறை வாழ்க்கையில் எந்த மாற்றங்களும் நிகழவில்லை என்றால், நம்முடைய ஆன்மிக நிலையிலும், அறிவார்ந்த மற்றும் நல்லொழுக்க நிலையிலும் முன்னேற்றம் ஏற்படவில்லை என்றால், மேலும், நாம் அல்லாஹ்வை வணங்குவதற்குரிய உரிமையை நிறைவேற்றவில்லை என்றால், மக்களுடன் அழகிய முறையில் நடக்கவில்லையென்றால், மேலும், மக்கள் நம்மிடம் மகிழ்ச்சியடைவதற்குப் பதிலாக நம்மை வெறுக்கும் வகையில் நமது ஒழுக்க நிலை உள்ளது என்றால் பின்னர் அத்தகைய பைஅத்தினால் எந்தப் பயனும் இல்லை.'

'உலகக் கல்வியைப் பெறுவதும் ஒரு அவசியமான விஷயமாகும்; இதுவும் அல்லாஹ்வின் மார்க்கமாகும். ஆனால், இறைவனை விட்டுப் பிரிக்கக் கூடிய எந்தக் கல்வியையும் நாம் பெறக் கூடாது. அதன் பின்னால் செல்லக் கூடாது. மேலும் இறைவனை விட்டுத் தூரமாக்கும் செயல்களுக்குப் பின்னால் நாம் செல்லக் கூடாது. மேலும்,இறைவனை விட்டு விலக்கக் கூடிய சமூகத்திற்கு மத்தியில் நாம் அமரக் கூடாது. எனவே இதுவே நமது சிந்தனையாக இருக்க வேண்டும்.'

அல்லாஹ் தஆலா தனது உண்மையான அடியார்களை அவர்களின் துன்பமான காலங்களில் பாதுகாத்து விடுகிறான். மேலும் உலகம் அதைக் கண்டு வியப்படைகிறது. அன்னார் (அலை) ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் உதாரணத்தை வழங்கியுள்ளார்கள். அதாவது அவர்களை எதிரிகள் நெருப்பில் தூக்கி எறிந்தபோதிலும், அல்லாஹ் அவர்களை நெருப்பிலிருந்து வெளியேற்றி விட்டான். ஹஸ்ரத் நூஹ் (அலை) அவர்களை அவர்களின் தோழர்களுடன் பெரும் புயலிலிருந்து கப்பல் மூலம் காப்பாற்றி விட்டான்.'

இவை வெறும் பழங்கதைகள் அல்ல ; மாறாக, இன்றும் அல்லாஹ் உயிருடன் இருக்கின்றானன் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே 'அல்லாஹ் இந்த உதாரணங்களை வழங்கியுள்ளான். அவன் இன்றும் தன் வல்லமையைக் காட்ட வல்லவன். நீங்கள் அவனுடன் சரியான தொடர்பை வைத்தால், மேலும் அவனுக்குரிய உரிமைகளை நிறைவேற்றக் கூடியவர்களாக திகழ்ந்தால், அவனது போதனைகளின்படி செயல்படக் கூடியவர்களாக திகழ்ந்தால், மேலும் அடியார்களின் உரிமைகளை நிறைவேற்றக் கூடியவர்களாக திகழ்ந்தால், அவன் தனது வல்லமையின் காட்சிகளை உங்களுக்குக் காட்டுவான்.'

ஹுஸ்ஸூர் அவர்கள் கூறினார்கள்: நீங்கள் தவ்பா செய்தால், மேலும், 'உங்களது இதயங்களைச் சுத்தமாக வைத்துக் கொண்டால், அப்போதுதான் நீங்கள் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறக் கூடியவர்களாக ஆக முடியும். மேலும், அப்போதுதான் துன்பங்களிலிருந்து விடுதலை பெறக் கூடியவர்களாக இருப்பீர்கள். துன்பத்திற்கான தருணம் வந்து விட்டால் அப்போது மட்டும் துஆ செய்யலாம் என்ற நிலை கூடாது.

'நாங்கள் துஆக்கள் செய்தோம்; ஆனால் அவை ஒப்புக் கொள்ளப்படவில்லை' என்று ஏராளமான மக்கள் எனக்கு எழுதுகின்றனர்.

அன்னார் (அலை) கூறினார்கள்: துன்பத்தின் தருணத்தில் துஆக்கள் செய்வீர்கள் என்றால், பின்னர் அவற்றை கேட்பதும் கேட்காமல் இருப்பதும் அல்லாஹ்வின் விருப்பமாகும். ஆனால் துன்பம் வருவதற்கு முன்பே துஆக்கள் செய்யுங்கள். அல்லாஹ்வுடன் சரியான தொடர்பை உருவாக்குங்கள். அப்போதுதான் நீங்கள் வெற்றி பெறுவீர்கள். சாதாரண மற்றும் நல்ல நிலையில் நீங்கள் செய்த துஆக்களே உங்களை துன்பத்திலிருந்து பாதுகாக்கக் கூடியவையாக இருக்கும்.'

ஹுஸ்ஸூர் அவர்கள் கூறினார்கள்: 'இஸ்லாத்தில் பெண்களின் உரிமைகள் என்னென்ன? என்று நான் கடந்த பல ஆண்டுகளாக எடுத்துரைத்து வந்துள்ளேன். அல்லாஹ் உங்களுக்கு வழங்கியுள்ள உரிமைகள் இவையாகும்; அதே சமயம் சில கடமைகளும் உள்ளன. அவற்றை நான் இன்று எடுத்துரைக்கிறேன். இந்த கடமைகளை நீங்கள் நிறைவேற்றும்போதுதான் உங்களுக்கான உரிமைகளும் நிலைபெறும். எனவே இதன் பக்கமும் கவனம் செலுத்துங்கள்.

அதற்கு நீங்கள் முயற்சி செய்ய வேண்டும்.'

அடுத்து, அன்னார் (அலை) துஆக்கள் குறித்து அறிவுரை வழங்கியவாறு கூறினார்கள்:

துஆக்கள் செய்யுங்கள்; உங்களது ஸஜ்தாக்களில் துஆ செய்யுங்கள்; உங்களது ருகூஃவிலும் துஆ செய்யுங்கள். சாதாரண நிலைமைகளிலும் சரி! கடினமான சூழ்நிலைகளிலும் சரி! துஆ செய்யுங்கள். எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். அல்லாஹ் தேவைகளற்றவன் ஆவான்; எப்போது என்ன துன்பம் வரும் என்று நமக்குத் தெரியாது. எனவே 'அல்லாஹ்வே! எங்களை ஒவ்வொரு கடினத்திலிருந்தும் காப்பாற்றுவாயாக! ; மேலும் எப்போதும் உனது பாதுகாப்பில் வைப்பாயாக!' என்று எப்போதும் துஆ செய்து வாருங்கள்.

நீங்கள் இவ்வாறு செய்தால், பின்னர் அல்லாஹ் தஆலா உங்களது காரியங்களை எவ்வாறு சீரமைத்துக் கொண்டே செல்கிறான் என்பதை நீங்கள் காண்பீர்கள். ஏனெனில், நீங்கள் அல்லாஹ் தஆலாவின் திருப்திக்காக இந்தப் பணியை செய்கின்றீர்கள்; மேலும், அதேபோன்று அல்லாஹ் தஆவின் உரிமைகளை நிறைவேற்றுவதுடன், உங்களது நல்லொழுக்கங்களையும் சீரமைத்துக் கொள்வது அவசியமாகும்.

நாவைக் கட்டுப்பாட்டில் வையுங்கள். ஒவ்வொரு நபரிடமும் மென்மையாகவும் நற்பண்புடனும் நடந்து கொள்ளுங்கள். கடுமையான சொற்களைப் பேசுபவர்களுடனும் மென்மையாக நடந்து கொள்ளுங்கள். சண்டை சச்சரவுகளிலிருந்து தவிர்ந்திருங்கள். மேலும் ஆணவத்திலிருந்து விலகியிருங்கள்.

இவை எத்தகைய விஷயங்கள் எனில், நீங்கள் இவற்றைச் செய்தால் அல்லாஹ் தஆலா இதற்குப் பகரமாக உங்களை தன் அருளால் கண்ணியப்படுத்துவான். இன்று நம் சமுதாயத்தில் வீடுகளிலும், மருமகள்கள், மாமியார்களிடையேயும் மற்றும் பிற உறவுகளிடையேயும் சிறு பிணக்கு ஏற்படும்போதே கடுமையான

வார்த்தைகளைப் பேசி ஒருவரை ஒருவர் புண்படுத்தும் முயற்சி நடைபெறுகிறது. இத்தகைய நிலைமை இருந்தால் அது ஒரு நம்பிக்கையாளரின் பண்பு அல்ல. இதைக் கொண்டு அல்லாஹ் தஆலாவின் நெருக்கத்தைப் பெற முடியாது. இதனால் 'பைஅத்'தின் உரிமையை நிறைவேற்ற முடியாது.

அவர்கள் மேலும் கூறினார்கள்: பலவீனமானவர்கள், நற்செயல்களில் மந்தமாக இருப்பவர்கள், நற்பண்புகளில் பலவீனமாக இருப்பவர்கள் அல்லது செயல்பாடுகளில் பலவீனமாக இருப்பவர்களிடம் நன்னடத்தையுடன் நடந்து கொள்ள வேண்டும். அவர்களின் தர்பிய்யத்தின் பக்கம் உங்களது கவனம் இருக்க வேண்டும். நீங்கள் இவ்வாறு செய்தால் அல்லாஹ் தஆலாவின் நெருக்கத்தைப் பெறுபவர்களாக மாறுவீர்கள்.

அன்னார் (அலை) கூறினார்கள்: நமது ஜமாஅத் செயல் முன்மாதிரியைக் காட்டவில்லை என்றால், பின்னர் நீங்கள் உங்களது செயலால் எனது தேவையின் மறுப்பை நிரூபணம் செய்பவர்களாக இருப்பீர்கள். பின்னர் வெறுமனே என்னிடம் பைஅத் செய்வதில் எந்தப் பயனும் இருக்காது.

அடுத்து, அன்னார் (அலை) கூறினார்கள்:

ஓர் உண்மையான அஹ்மதியாக மாற வேண்டும் என்றால், மேலும், உங்களை இறைவனின் நெருக்கத்தைப் பெறக் கூடியவர்களாக ஆக்க வேண்டும் என்றால், பின்னர் நீங்கள் உங்களது இறை வணக்கங்களின் தரத்தை உயர்த்த வேண்டும்.மேலும், உங்களது நற்பண்புகளின் தரத்தையும் உயர்த்த வேண்டும். மேலும் உங்களது செயல் நிலைகளையும் சீரமைக்க வேண்டும்.

அன்னார் (அலை) கூறினார்கள்: நமது வாழ்க்கை சாதாரண உலகவாதியின் வாழ்க்கையாக இருக்கக் கூடாது. 'நான் பைஅத்தில் இணைந்துள்ளேன்' என்று வெறுமனே நாவினால் கூறிவிட்டு, பின்னர் அமல் ஏதும் இல்லை என்றால் அதனால் எந்தப் பயனும் இல்லை.

எவரது சொல்லும், செயலும் ஒன்றாக இருக்குமோ அவரே உண்மையான முஸ்லிம் ஆவார். அதாவது, உலகவாதிகள் இப்படி செய்கின்றார்கள் என்பதை மட்டும் பார்த்து விட்டு நாம் அதன் தாக்கத்திற்குள்ளாகி விடக் கூடாது. மாறாக நமது நோக்கங்கள் மிகவும் உயர்ந்தவையாகும். நாம் உலகவாதிகளைச் சீர்திருத்த வேண்டும், அவர்களுக்கு தர்பிய்யத் அளிக்க வேண்டும், அவர்களைச் சரியான பாதையில் வழி நடத்த வேண்டும். இன்றைய காலத்தில் உலகில் மார்க்கத்தை விட்டு விலகும் நிலை உருவாகி வருகிறது. உண்மை என்ன? என்பதையும், மேலும், இறைவனின் பக்கம் வாருங்கள்; இதிலேயே உங்கள் வாழ்வு உள்ளது என்பதையும் நாம் நமது துஆக்களினாலும், செயல்களினாலும் உலகத்திற்கு உணர்த்த வேண்டும்.

அன்னார் (அலை) கூறினார்கள்: நீங்கள் என்னுடன் தொடர்பு வைத்துள்ளீர்கள் என்றால், பின்னர் எனது நோக்கங்களையும், விருப்பங்களையும் நிறைவேற்றுங்கள். அந்த நோக்கங்கள் இவையே ஆகும். அதாவது, நீங்கள் இறைவனின் சன்னிதானத்தில் உங்களது தூய்மையையும், பற்றையும் வெளிப்படுத்த வேண்டும். மேலும், திருக்குர்ஆனின் போதனைகளின்படி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அமல் செய்து காட்டியதைப் போன்றும், ஸஹாபிகள் அமல் செய்து காட்டியதைப் போன்றும் நீங்களும் அமல் செய்யுங்கள்.

திருக்குர்ஆனின் அசல் விருப்பத்தை அறிந்து கொள்ளுங்கள். மேலும் அதன்படி செயல்படுங்கள். நாவினால் ஒப்புக் கொண்டு விட்டு அமலில் எந்த ஒளியும், வெப்பமும் இல்லையென்றால் பின்னர் இறைவனின் சன்னிதானத்தில் இந்த விஷயம் மட்டுமே போதுமானதாக இருக்க முடியாது. நினைவிற் கொள்ளுங்கள்! இறைவன் எந்த ஜமாஅத்தை நிறுவ விரும்புகிறானோ அது அமல் இன்றி உயிர்ப்புடன் இருக்க முடியாது. இது ஆதம் (அலை) அவர்களின் காலம் முதல் தொடங்கப்பட்ட ஒரு மகத்தான ஜமாஅத் ஆகும். உலகில் எந்த நபியும் இந்த அழைப்பைக் கொடுக்காமல் வரவில்லை. இதற்கு கண்ணியம் வழங்குங்கள். அதற்கு வழங்கப்படும் கண்ணியம் என்னவென்றால், உண்மையாளர்களின் கூட்டத்தினர் நாங்களே ஆவோம் என்பதை நீங்கள் உங்களது செயல்களின் மூலம் நிரூபணம் செய்யுங்கள். அவர் ஆணாக இருந்தாலும் சரி! பெண்ணாக இருந்தாலும் சரி! குழந்தையாக இருந்தாலும் சரி! அல்லது இளைஞராக இருந்தாலும் சரி! அல்லது முதியவராக இருந்தாலும் சரி! நாம் நமது செயல்களின் மூலம் மார்க்கத்தின் உண்மையான போதனைகளின்படி செயல்பட வேண்டும் என்று நம்மில் ஒவ்வொருவரும் முயற்சி செய்ய வேண்டும். நாம் இறைவனின் கட்டளைகளின்படி அமல் செய்ய வேண்டும் என்று முயற்சி செய்ய வேண்டும். இறைவனின் மீதான அன்பை இதயங்களில் உருவாக்க வேண்டும். நமது நற்பண்புகளை உயர்த்த வேண்டும். இவை நிகழும்போதுதான் நாம் உண்மையான முறையில் ஜமாஅத்தில் இணைந்ததற்கான உரிமையை நிறைவேற்றுபவர்களாகவும் இருப்போம்.

எனவே, நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களிடம் செய்த பைஅத்தின் உரிமையை நிறைவேற்றுவதன் பக்கம் கவனம் செலுத்துவோம். மேலும் தமது பைஅத்தின் வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கான புரிதலையும், அறிவையும் கொண்டவர்களாக ஆக்கிக் கொள்வோம் என்று நீங்கள் அனைவரும் உறுதியேற்க வேண்டும். நபித்துவ காலத்திலிருந்து நாம் தொலைவில் சென்று கொண்டிருக்கின்றோம்; பலவீனங்களும் அதிகரித்து கொண்டிருக்கின்றன. அந்த பலவீனங்களை அகற்றுவதற்கும், நாமும் அல்லாஹ் தஆலாவிற்கு நெருக்கமாக இருப்பதற்குமான ஒரே வழிமுறைதான் உள்ளது. அது என்னவென்றால், நாம் நமது இறை வணக்கங்களின் தரத்தை உயர்த்த வேண்டும். மேலும் நமது அறிவுத் தரத்தையும் உயர்த்த வேண்டும். அப்போதுதான் நமது பிள்ளைகள் மற்றும் சந்ததிகளின் கேள்விகளுக்குப் பதிலும் வழங்க முடியும். மேலும், பிரச்சாரக் களத்திலும் நமது பங்களிப்பை வழங்க முடியும்.

பெண்களின் உரிமைகள் குறித்து இஸ்லாத்தைத் தவிர வேறு எந்த மார்க்கமும், அரசாங்கமும் இவ்வளவு விரிவாக எடுத்துரைக்கவில்லை. பெண்களுக்கான உரிமைகள் என்ன? என்பதை இந்தக் காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பர் தெளிவாக எடுத்துரைத்து விட்டார்கள். பெண்ணுக்கு இஸ்லாம் எத்தகைய உயரிய அந்தஸ்து வழங்கியுள்ளது என்பதையும் அன்னார் (அலை) தெளிவாக எடுத்துரைத்து விட்டார்கள்.எனவே, ஒவ்வொரு அஹ்மதிப் பெண்ணும் தான் இஸ்லாத்தை நம்பக் கூடியவள் ஆவேன் என்பதையும், அல்லாஹ் தஆலாவுடன் தொடர்பை உருவாக்கக் கூடியவள் ஆவேன் என்பதையும், மேலும் தான் உண்மை இஸ்லாத்தின் சேவகி ஆவேன் என்பதையும் எப்போதும் அவர் நினைவிற் கொள்ள வேண்டும்.

எனவே, அவர் அல்லாஹ் தஆலாவுடனான தமது தொடர்பை அதிகரிப்பதில் முழு முயற்சி செய்ய வேண்டும். பிரச்சாரக் களத்திலும் நீங்கள் முன்னால் செல்ல வேண்டும். மேலும், உங்களது சந்ததியினரையும் முன்னேற்ற வேண்டும். அப்போதுதான், இஸ்லாத்தின் அழகிய போதனையை இந்த உலகின் மூலை முடுக்கெல்லாம் பரப்புவதில் நமது சரியான பங்களிப்பை வழங்க முடியும். அல்லாஹ் தஆலா உங்கள் அனைவருக்கும் இதற்கான நற்பேறை வழங்குவானாக!

உரைக்குப் பிறகு ஹுஸூர் அன்வர் அவர்கள் துஆ செய்தார்கள்.

* * * * * * * * * * *

1-ம் பக்கத் தொடர்ச்சி (மல்ஃபூஸாத்).....

மீது திருப்தி கொள்வாயாக! மேலும், எனது தவறுகளையும், பாவங்களையும் மன்னிப்பாயாக! ஏனெனில் நீ மிக்க மன்னிப்பவனும், மீண்டும் மீண்டும் கருணை காட்டுபவனுமாவாய்! உனக்கு மிகவும் விருப்பமான செயல்களை என்னை கொண்டு செய்ய வைப்பாயாக! எனக்கும், எனது எனது நஃப்ஸிற்குமிடையில் கிழக்கிற்கும், மேற்கிற்கும் இடையில் உள்ள தொலைவை உண்டாக்குவாயாக! எனது மரணம், எனது வாழ்வு, மற்றும் எனது ஆற்றல் அனைத்தையும் மேலும் எனக்கு கிடைத்துள்ள அனைத்தையும் உனது வழியிலேயே ஆக்கிவிடுவாயாக! உனது அன்பிலேயே என்னை உயிருடன் வைப்பாயாக! உனது அன்பிலேயே என்னை மரணிக்கச் செய்வாயாக! மேலும், உன்னுடைய பூரணமான அன்பில் என்னை உயர்த்துவாயாக!

கருணையாளர்களுக்கெல்லாம் பெருங் கருணையாளனே! எந்தப் பணியின் பிரச்சாரத்திற்காக நீ என்னை அனுப்பியுள்ளாயோ, மேலும், எந்தச் சேவைக்காக நீ என் இதயத்தில் உத்வேகத்தை ஏற்படுத்தியுள்ளாயோ, அதனை நீ உனது அருளாலேயே நிறைவேற்றி வைப்பாயாக! இந்த எளியவனின் கரங்களால் இஸ்லாத்தின் எதிரிகள் மீதும், இன்னும் இஸ்லாத்தின் சிறப்புகளை அறியாமல் இருப்பவர்கள் மீதும் சான்றை முழுமை செய்வாயாக! மேலும் இந்த எளியவன் மற்றும் இந்த எளியவனின் அனைத்து நண்பர்கள், தூய உள்ளம் படைத்தவர்கள் மற்றும் ஒருமித்த கருத்து கொண்டவர்கள் மீது பாவமன்னிப்பு மற்றும் கருணையின் பார்வையால் உனது ஆதரவின் நிழலில் வைத்து, மார்க்கம் மற்றும் உலகில் நீ அவர்களுக்குப் பொறுப்பேற்று உதவியாளனாக ஆகிவிடுவாயாக! மேலும், அனைவரையும் உனது திருப்தியின் இல்லத்தில் சென்றடைய செய்வாயாக! மேலும், உனது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும், அன்னாரது குடும்பத்தார் மீதும், மற்றும் அன்னாரது ஸஹாபிகள் மீதும் அதிக அதிகமான ஸலவாத்தும் ஸலாமும் பரக்கத்தும் இறங்கச் செய்வாயாக!

ஆமீன் யா ரப்பல் ஆலமீன்!"

(மக்தூபாத்தே அஹ்மதிய்யா - தொகுதி 3, பக்கம் 27)

* * * * * * * * * * *

1-ம் பக்கத் தொடர்ச்சி..... (தஃப்ஸீரே கபீர்)

ஏழைகளுக்காகச் செலவழித்து அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தும் பொருட்டு இந்த அனைத்து செல்வத்தையும் நாம் உங்களுக்கு அளித்திருக்கிறோம்.

பைத்துல்லாஹ் ஹஜ்ஜின் சந்தர்ப்பத்தின்போது செய்யப்படும் இந்தக் குர்பானிகளின் முக்கியத்துவத்துவத்தின் பக்கம் இந்த வசனங்களில் அல்லாஹ் கவனமூட்டியுள்ளான். மேலும் இந்த குர்பானிகள் அல்லாஹ்வின் அடையாளங்களில் அடங்கும் என்றும், மேலும், இந்தக் குர்பானிகளில் அல்லாஹ்விடமிருந்து பெரும் பரக்கத் வைக்கப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளான்.' (தஃப்ஸீரே கபீர் - தொகுதி 6, பக்கம் 53-54)

* * * * * * * * * * *

12-ம் பக்கத் தொடர்ச்சி (ஹுஸூர் அவர்களின் சுற்றுப் பயணம்).....

பணிவை வெளிப்படுத்தினார். அரசராக இருந்தபோதிலும் அவர் தன்னம்பிக்கையை வெளிப்படுத்தினார். மேலும், நாம் எப்படி தற்பெருமையிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியும்? என்பதையும் அவர் காட்டிவிட்டார்.

கேள்வி: நாங்கள் மகிழ்ச்சியாக எப்படி வாழ முடியும்? என்று மற்றொரு சிறுவர் கேட்டார்.

பதில்: 'உனக்கு என்ன வயது?' என்று அச்சிறுவனிடம் ஹுஸூர் அன்வர் அவர்கள் வினவினார்கள். (அச்சிறுவன், 'எனக்கு ஒன்பது வயது' என்றான்)

பதில்: ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: நீங்கள் எப்போதும் மனநிறைவுடன் இருக்க வேண்டும். அல்லாஹ் உங்களுக்கு ஏராளமான விஷயங்களை அருளியுள்ளான் என்று எப்போதும் சிந்தியுங்கள். அல்லாஹ் உனக்கு நல்ல உடல்நலம் வழங்கியுள்ளான்; நல்ல உடல் அமைப்பை வழங்கியுள்ளான்; அழகிய முகத்தை வழங்கியுள்ளான்; உங்களுடைய பார்வைத் திறனும் நல்லதாக உள்ளது. அல்லாஹ் உங்களுக்கு வாய் மற்றும் நாவை வழங்கியுள்ளான். அதன் மூலம் உங்களால் நல்ல முறையில் பேச முடியும்; காது இருக்கின்றது; அதன் மூலம் நீங்கள் கேட்க முடியும். நீங்கள் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துங்கள்.

மேலும், அல்லாஹ் உங்களுக்கு பள்ளிக்கூடம் செல்வதற்கும், உங்களை நீங்கள் கல்வியாளராக ஆக்கிக் கொள்வதற்கும் அனைத்து வசதிகளையும், வாய்ப்புகளையும் வழங்கியுள்ளான். அல்லாஹ் உங்களுக்கு நல்ல பெற்றோரை வழங்கியுள்ளான். மேலும் நல்ல சகோதர, சகோதரிகளையும் வழங்கியுள்ளான். ஆக, இந்த விவகாரங்கள் உங்களுக்கு மகிழ்ச்சியளிக்கின்றன. (உங்களுக்கு சகோதர, சகோதரிகள் இருக்கின்றனரா? என்று ஹுஸூர் அன்வர் அவர்கள் வினவினார்கள்)

அப்போது, அந்த சிறுவர் கூறினார்: அவர்கள் உங்களிடம் நல்ல முறையில் நடந்து கொள்ளவில்லையென்றாலும், அப்போதும் கூட எப்போதும் மகிழ்ச்சியாக இருங்கள். மேலும், அல்லாஹ் உங்களுக்கு எண்ணற்ற விஷயங்களை வழங்கியிருக்கின்றான் என்பதற்காக அவனுக்கு நன்றி செலுத்துங்கள்.

பாருங்கள்! உலகில் அடிப்படை வசதிகளிலிருந்து இழப்பிற்குரியவர்களாக இருக்கக் கூடிய ஏராளமான நபர்கள் இருக்கின்றனர். அவர்கள் உயிருடன் வாழ்வதற்கு தேவையான அளவு கூட அவர்களுக்கு உணவு கிடைப்பதில்லை. அவர்களுக்கு பள்ளிக்கூடம் செல்வதற்கும் வாய்ப்பு கிடைப்பதில்லை. சிலநேரம் அவர்களுக்கு அசுத்தமான கிணற்று நீரை பருக நேரிடுகிறது. அதேநேரம் நீங்களோ பாட்டில் அல்லது உங்களது வீட்டு குடிநீர் குழாயிலிருந்து தண்ணீர் அருந்துகின்றீர்கள்.

எனவே அல்லாஹ் உங்களுக்கு எப்படி எண்ணற்ற விஷயங்களை அருளியுள்ளான் என்று நீங்கள் சிந்தித்தால் பின்னர் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். மேலும் நீங்கள் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தக் கூடியவராக இருந்தால், பின்னர் அல்லாஹ் உங்களை மேலும் மகிழ்ச்சியாக வைப்பான். எப்போதும், அடிப்படை வசதிகளிலிருந்து இழப்பிற்குரியவர்களாக இருக்கும் அந்த மக்களின் பக்கம் பாருங்கள். ஆனால், உங்களுக்கோ இந்த அனைத்து வசதிகளும் கிடைத்திருக்கின்றன. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒரு நபிமொழி உள்ளது. அன்னார் (ஸல்) கூறினார்கள். மார்க்கம் மற்றும் இறையச்சம் மற்றும் நன்மையின் விவகாரமாக இருக்கும்போது, நீங்கள் எப்போதும் உங்களை விட சிறந்த மக்களின் பக்கம் பாருங்கள். மேலும் உலக விவகாரங்களுக்கான விஷயமாக இருக்கும்போது, எப்போதும் நீங்கள் உங்களை விட வறிய நிலையில் இருக்கும் மக்களின் பக்கம் பாருங்கள். அதாவது உங்களை விட குறைவான வசதிவாய்ப்புகளைக் கொண்ட மக்களின் பக்கம் பாருங்கள். இந்த விஷயம் உங்களை அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தக் கூடியவர்களாக மாற்றும். மேலும் நீங்கள் மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள்.

(நன்றி: அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் மார்ச் 22, 2022-ம் ஆண்டு)

தமிழாக்கம்
முரப்பி
A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * * * * * *

ஸீரத் காத்தமுன் நபிய்யீன் (ஸல்) அவர்கள்

நூலாசிரியர் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் எம். ஏ (ரலி)

அரேபியாவும் பண்டைய மார்க்கமும்
(சென்ற இதழின் தொடர்ச்சி...)

அரேபியாவில் இஸ்லாம் தோன்றுவதற்கு முன்பு பல்வேறு மார்க்கங்களைப் பின்பற்றக் கூடியவர்கள் இருந்தனர். அவர்களில் எல்லாரையும் விட மிகவும் தனித்துவமானவர்களாக சிலை வணங்கிகளும், நாத்தீகர்களும், மஜூஸிகளும், ஸாபிகளும், கிறிஸ்தவர்களும் மற்றும் யூதர்களுமாக இருந்தனர். இந்த மார்க்கங்களில் எல்லாவற்றையும் விட மிக அதிகமாக நாட்டில் பரவியிருந்த மார்க்கம் சிலை வணங்கிகளின் மார்க்கமாக இருந்தது. அதனை நாட்டின் அசல் மார்க்கம் என்று கூற வேண்டும். சிலை வணங்கிகள் அல்லாஹ்வின் இருப்பை ஏற்றுக் கொண்டிருந்தனர். ஆனால், அவனை அடைவதற்கான ஊடகமாக சிலைகளை கருதி வந்தனர். ஆயினும், இடைப்பட்ட ஊடகங்களில் அவர்கள் எந்த அளவிற்கு சிக்கியிருந்தனர் என்றால், உண்மையான இறைவனாகிய அல்லாஹ்வின் சிந்தனை அவர்களின் உள்ளங்களிலிருந்தே வெளியேறி விட்டது. ஒன்றுபட்ட சிலைகள் மட்டுமின்றி, பொதுவாக ஒவ்வொரு கோத்திரமும் தமக்கென தனித்தனியான சிறப்பான சிலைகளை கொண்டிருந்தன. ஆக, மக்காவில் அஸாஃப் மற்றும் நாயிலா போன்றவை குறைஷிகளின் சிலைகளாக இருந்தன. அவற்றிற்கு முன்னால் பலிகளும் கொடுக்கப்பட்டு வந்தன. உஸ்ஸா நக்லா சிலைகள் குறைஷிகளுக்கும், பனூ கனானா கோத்தரத்திற்கும் பொதுவானதாக இருந்தது. தாயிஃபில் லாத் எனும் பனூ ஸகீஃபின் சிலை பொதுவானதாக இருந்தது. ஹுஸைல் கோத்திரத்திற்கு ஸவாஃ எனும் சிலை இருந்தது. மனாத் எனும் சிலை அத்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரத்தின் சிலையாக இருந்தது. **(தொடரும்.....)**

(ஸீரத் காத்தமுன் நபிய்யீன், பக்கம் 59 - 63)

தமிழாக்கம்
முரப்பி
A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * * * * * *

கண்ணியத்திற்குரிய பத்ர் வாரப் பத்திரிகை காதியான் வாசகர்களின் கவனத்திற்கு

காலத்தின் இமாம் மற்றும் ஹஸ்ரத் நபிகளின் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அருளுக்குரிய பராமரிப்பில் இந்த பத்திரிகை முற்றிலும் வளர்ந்தாகும் என்ற பெருமையை பத்ர் பத்திரிகை பெற்றுள்ளது. தொடக்கம் முதல் இன்று வரை, முதலில் நபித்துவத்தின் கீழும், பின்னர் நபத்துவத்தின் வழியிலான கிலாஃபத்தின் நிழலிலும் இந்த பத்திரிகை தனது தஃப்லீக் மற்றும் தர்பிய்யத் பணிகளைத் தொடர்ந்து செய்து கொண்டு செல்கிறது. இந்த பத்திரிகையின் மூலம் பல நற்பேறு பெற்ற ஆன்மாக்கள் அஹ்மதிய்யத்தில் வந்து இணைந்துள்ளன. அஹ்மதிய்யா கிலாஃபத்தின் வழிகாட்டுதல்களின் ஒளியில், இந்த பத்திரிகையின் மூலம் அஹ்மதி குடும்பங்களுக்கு தர்பிய்யத் வழங்கப்பட்டு வருகிறது; இன்ஷா அல்லாஹ் எதிர்காலத்திலும் நடைபெற்றுக் கொண்டே இருக்கும்.

பத்திரிகைத் தயாரித்தல், அச்சிடுதல், பேக்கிங் செய்தல் மற்றும் விநியோகித்தல் ஆகியவற்றில் பெரும் செலவுகள் ஏற்படுகின்றன. குறைந்தபட்ச சந்தா தொகையைக் கொண்டு மட்டும் இச்செலவுகளை ஈடுகட்ட முடியாது. எனவே, காலத்தின் இமாமுடைய இந்த பத்திரிகையின் செலவுகளை ஏற்றுக் கொள்ளக் கூடிய சிறப்பு உதவியாளர்கள் மிக அதிகமாகத் தேவைப்படுகிறார்கள். இந்த பத்திரிகைக்கு நிதி உதவி செய்பவர்களின் உதவியை அல்லாஹ் ஒருபோதும் வீணாக்க மாட்டான். ஏனெனில் உமக்கு உதவுபவர்களுக்கு நான் உதவுவேன் என்பது அல்லாஹ்வின் வாக்குறுதியாகும். உதவியாளர்களின் அனைத்து விவகாரங்களையும் அல்லாஹ்வே பாதுகாப்பான். மேலும் தனது வாக்குறுதியின்படி அவர்களின் தொழில், வேலைவாய்ப்பு, தோட்டம், விளைச்சல் மற்றும் செல்வத்தில் பல மடங்கு பரக்கத்தையும் தருவான். இன்ஷா அல்லாஹ்!

எந்தவொரு வழிகாட்டுதலுக்கும்
வாராந்திர 'பத்ர்' பத்திரிகையின் மேலாளர்
அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு எண்
9815639670

* * * * * * * * * * * *

திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வின் நினைவிலேயே
உள்ளங்கள் அமைதி அடைகின்றன
. (13:29)

A. Khaleel Ahmad
(Melapalayam)

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2026-2028 Vol. 11 THU 15 OCTOBER 2026 Issue No. 42

ACT. MANAGER
_ATHAR AHMAD SHAMIM
Mobile : +91 9815639670
E-mail : managerbadrqnd@gmail.com

ANNUAL SUBSCRIPTION : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்களின் அமெரிக்கா சுற்றுப் பயணம் - 2012

(அறிக்கை : அப்துல் மாஜித் ஸாஹிப் தாஹிர்)

ஹஸ்ரத் ஐந்தாம் கலீஃபத்துல் மஸீஹ் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சலஸ் நகரைச் சேர்ந்த அத்ஃபால் சிறுவர்களுடன் ஆன்லைன் கலந்துரையாடல்

(Virtual Mulaqat)

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தலைவரான ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள், 2022 மார்ச் 5 அன்று அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சலஸ் நகரைச் சேர்ந்த 'மஜ்லிஸ் அத்ஃபாலுல் அஹ்மதிய்யாவின் உறுப்பினர்களுடன் ஆன்லைன் சந்திப்பு நிகழ்த்தினார்கள். ஹுஸூர் அன்வர் அவர்கள் இந்த சந்திப்பை இஸ்லாமாபாத் (டில்ஃபோர்டு - இங்கிலாந்து) MTA ஸ்டுடியோவில் அமர்ந்திருந்தார்கள். மேலும் மஜ்லிஸ் அத்ஃபாலுல் அஹ்மதிய்யாவின் 79 உறுப்பினர்கள் பைஅத்துல் ஹுமீது (அமெரிக்கா) கலீஃபோர்னியாவிலிருந்து நேரலையில் கலந்து கொண்டனர்.

இந்த சந்திப்பு மரபுப்படி திருக்குர்ஆன் திலாவத்துடன் தொடங்கியது. அதன் பிறகு மஜ்லிஸ் அத்ஃபாலுல் அஹ்மதிய்யாவின் உறுப்பினர்களுக்கு தங்களது கொள்கை மற்றும் நிகழ்கால நிகழ்வுகள் குறித்து ஹுஸூர் அன்வர் அவர்களளிடம் கேள்விகள் கேட்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது.

கேள்வி : குழந்தைகளின் துஆக்கள் அதிகமாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன என்று சிலமுறை பெரியவர்கள் கூறுகின்றனர்; அன்பிற்குரிய ஹுஸூர் அன்வர் அவர்கள் எங்களுக்கு இந்த விஷயத்தை மேலும் புரிய வைக்க முடியுமா?

பதில்: ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: குழந்தைகள் களங்கமற்றவர்களாக இருக்கின்றனர்; எனவே இவ்வாறு கூறப்படுகிறது. மேலும் ஓர் அறிவிப்பும் ஆகும். குழந்தைகள் களங்கமற்றவர்களாக இருக்கின்றனர்; எனவே அவர்களின் துஆக்கள் அதிகம் கேட்கப்படுகின்றன. மேலும், சில எப்படிப்பட்ட பெரியவர்கள் இருக்கின்றனர் என்றால், அவர்களிடம் பாவம் நிகழ்ந்து விடுகின்றது அல்லது தமது தொழுகைகளை தொடர்ந்து நிறைவேற்றாதவர்கள் இருக்கின்றனர்; மேலும் அவர்களுக்கு உலக விவகாரங்களின் பக்கம் அதிக கவனம் இருக்கின்றது; மேலும் அல்லாஹ்வுடன் தமது பொறுப்புகளில் நீதத்துடன் நடந்து கொள்வதில்லை. ஆக, இப்படிப்பட்ட சில நபர்கள் இருக்கின்றனர்; அவர்களுக்கு ஏதாவது விஷயத்திற்கான தேவை ஏற்படும்போது மட்டுமே அவர்கள் துஆ செய்கின்றனர். ஆனால், குழந்தைகளை பொறுத்த வரை, அவர்கள் உலக விவகாரங்களில் அதிகமாக மூழ்கியிருப்பதுமில்லை. அவர்கள் அந்த வயதில் மாசற்றவர்களாக இருக்கின்றனர்.

ஆக, அவர்கள் துஆ செய்கின்றபோது அல்லாஹ் அவர்களின் துஆக்களை அவர்களின் களங்கமற்றத் தன்மையின் காரணமாக அதிகமாக ஒப்புக் கொள்கிறான். ஏனெனில், இந்த துஆ அவர்களின் உள்ளத்திலிருந்து வருகிறது. மேலும், அல்லாஹ் களங்கமற்ற மக்களை விரும்புகிறான். மேலும், இறையச்சம் கொண்ட பெரியவர்கள் இருக்கின்றனர்; அவர்களும் களங்கமற்றவர்களாக இருக்கின்றனர். மேலும் அல்லாஹ் அவர்களின் துஆக்களையும் கேட்கின்றான். ஆனால், பெரும்பாலான விவகாரங்களில் நாம் பார்க்கின்றோம். மக்கள் உலக விவகாரங்களில் பெரும்பாலும் மும்முரமாக இருக்கின்றனர். அதேநேரம் குழந்தைகளுக்கு உலகியல் விவகாரங்களைக் குறித்து அதிகம் அறிந்திருப்பதில்லை. மேலும் அவர்களிடமிருந்து பாவமும் வெளிப்படுவதில்லை. எனவே அல்லாஹ் அவர்களின் துஆக்களை அதிகம் ஒப்புக் கொள்கிறான்.

கேள்வி : அன்பிற்குரிய ஹுஸூர் அவர்களே! தற்பெருமைக்கும், தன்னம்பிக்கைக்கும் இடையே உள்ள வித்தியாசம் என்ன? விளக்கம் தாருங்கள் என்றும், தற்பெருமையிலிருந்து எப்படி மனிதன் தப்பிக்க முடியும்? என்றும் மற்றொரு சிறுவர் கேள்வி கேட்டார்.

பதில்: ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்:

தற்பெருமை என்றால் என்ன? என்று தங்களுக்கு தெரியுமா? என்று ஹுஸூர் கேட்டார்கள். (தற்பெருமையின் ஓர் அம்சம் அதிகம் தன்னம்பிக்கை கொள்வதாகும் என்று அந்த சிறுவர் பதிலளித்தார்)

ஹுஸூர் அன்வர் கூறினார்கள்: அதிகமான தன்னம்பிக்கை தற்பெருமை அல்ல. மாறாக, நீங்கள் என்ன கூறுகின்றீர்களோ அதுவே சரியாகும் ; மேலும் மற்றவர்கள் என்ன கூறுகிறார்களோ அது தவறாகும் என்று நீங்கள் கருதும்போது அது தற்பெருமையாகும். நான் கூறுவது சரியாகும் என்று நீங்கள் கருதுவது தவறில்லை. ஆனால், நீங்கள் வேறு ஒருவருடைய கருத்தை சகித்துக் கொள்ளாமல் இருப்பதும், மேலும் நீங்கள் அவர்களுடன் தவறான வழிகளில் சண்டையிடத் துவங்கி விடுவதும் ஆகும். மேலும் நீங்கள் உங்களை மட்டுமே சரியானவராக கருதுவது இது தற்பெருமை ஆகும்.

அதேநேரம் தன்னம்பிக்கை என்பது என்னவென்றால், நீங்கள் எப்போது பேசினாலும் சான்றுகளுடன் பேசுங்கள். நீங்கள் என்ன கூறுகின்றீர்களோ அது தொடர்பாக உங்களிடம் அனைத்து சான்றுகளும் இருக்கின்றன என்று நீங்கள் கருதினால் பின்னர் நீங்கள் அந்த சான்றுகளை முன்வைக்கலாம். மற்றவர் விரும்பினால் உங்களது சான்றுகளை ஒப்புக் கொள்ளட்டும்; இது தன்னம்பிக்கையாகும். ஆனால் நீங்கள் ஒருவருடன் தர்க்கம் செய்வதும், உங்களது சான்றுகள் தவறானவையாகும் என்று நிரூபணமாகி விட்டால் மேலும் மக்கள் உங்களது கூற்றை ஒப்புக் கொள்ளவில்லை என்றால், நீங்கள் கோபமடைவதும் அவர்களுடன் சண்டையிடத் துவங்கி விடுவதும் தற்பெருமை ஆகும். தன்னம்பிக்கை இருக்க வேண்டும். மேலும் அதற்கு உங்களது சொந்த அறிவை வளர்த்துக் கொள்ள நேரிடும். ஆனால் சிலநேரங்களில் தற்பெருமை கொண்ட நபர்களிடம் அறிவு இருப்பதில்லை. ஆனால், அதன் பின்னரும் நாங்கள் கூறுவதே சரியாகும் என்பது அவர்களின் எண்ணமாக இருக்கின்றது.

எவர்களுக்கு தங்கள் மீது நம்பிக்கை இருக்கின்றதோ அத்தகைய நபர்களுக்கு தங்களிடம் உள்ள சான்றுகளை நிறுவுவதற்கு அறிவு இருக்கும். அந்த சான்றுகளை ஒருவர் ஒப்புக் கொண்டாலும் சரி அல்லது ஒப்புக் கொள்ளாவிட்டாலும் சரி. ஆனால், எனக்கு இந்தத் தலைப்பைக் குறித்து முழுமையான அறிவு உள்ளது என்று உங்களுக்கு அறிவு இருக்கும். எனவே (தற்பெருமை கொண்ட) அத்தகைய நபர்களுடன் நீங்கள் சண்டையிட்டு தர்க்கம் செய்வதற்கு பகரமாக ஆகட்டும்; நீங்கள் என்னவெல்லாம் கூறுகின்றீர்களோ அவை சரியாகும் என்று மட்டும் நீங்கள் அவர்களிடம் கூறிவிடுங்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களும் இதனை எடுத்துரைத்துள்ளார்கள். அதாவது, ஓர் அரசர் இருந்தார். அவர் தனது கைகளால் திருக்குர்ஆனை எழுதி வந்தார். ஒருமுறை ஓர் ஆலிம் அவரை சந்திக்க வந்தார். மேலும் அவர் திருக்குர்ஆன் எழுதப்பட்டிருப்பதைக் கண்டார். நீங்கள் இந்த சொல்லை சரியாக எழுதவில்லை என்று அந்த ஆலிம் அரசரிடம் கூறினார். அப்போது அரசர் அந்த சொல்லை சுற்றிலும் ஒரு வட்டத்தை வரைந்து விட்டார். பின்னர் அந்த ஆலிம் சென்ற பிறகு, அரசர் அந்த வட்டத்தை அழித்து விட்டார். அப்போது, நீங்கள் ஏன் வட்டத்தை வரைந்து பின்னர் அழித்து விட்டீர்கள்? என்று அரசருக்கு அருகில் அமர்ந்திருந்த மக்கள் அவரிடம் கேட்டனர். அதற்கு அந்த அரசர் கூறினார்; நான் இந்த சொல்லை சரியாகவே எழுதியுள்ளேன்; ஆனால், தான் கூறுவது சரியாகும் என்பது அந்த ஆலிமின் எண்ணமாக இருந்தது. எனவே நான் இந்த சொல்லை சுற்றி வட்டம் வரைந்து வைத்து விட்டேன். மேலும் அவருடன் தர்க்கம் செய்யவில்லை. மேலும், அவரும் மகிழ்ச்சியாக இருக்கட்டும் என்று கருதி நான் அதில் அடையாளமிட்டு விட்டேன்.

தற்பெருமையை காட்டுவதற்கு பகரமாக அரசர் உயர்தரமான

இதன் தொடர்ச்சி 11-ம் பக்கம்....

National Watch Company
Sales & Service

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172
O.A.N. Doors & Steels
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, { opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad